"ஞானபாநு"

VOL-3. தொகுதி-3. | May—1915. ராக்ஷஸஸூ வைகாசிமீ | No-2. பகுதி-2.

இல்லையென்னாதே.

"இல்லை" யென்ற சொல்லைப்போல இழிந்தசொல் எந்தப் பாஷையிலும் இல்லை. "இல்லை" என்ற பதமே உண்மையை மறுக்கின்றதல்லவா? எவருக்கும் நீ "இல்லை" யென்று சொல்லாதே. "இல்லையென்பதே கொடுஞ்சொல். எவர் எதைப்பெறுதற்குத் தகுதியுடையவரோ, அவர் அதைக் கேட்டபின், அது நினது உயிராயினும் சரியே, வேறு யாதாயினும் சரியே, இல்லையென்னாதே. கொடுத்துவிடு. "இல்லை" யென்று சொல்வதில் கௌரவமுண்டா? பெருமையுண்டா? இல்லையென்று கேட்டவர்க்கு இல்லையென்னாது கொடுத்தல் ஈசனுடைய இயல்பு அன்றோ? யாவர் எது கேட்பினும் இல்லையென்னாதே. "இல்லை" யென்று சொல்வதற்கு உனக்கு அதிகாரம் ஏது? உனக்குப் பாத்தியதை ஏது? ஈஸ்வர சிருஷ்டியிலுட்பட்ட பொருள்களில் உனக்குமாத்திரம் சொந்தமாக யாது உள்ளது? சமஸ்தகோடி ஜீவராசிகளுக்கும் சமபாத்தியதை இல்லையென்று சொல்வதற்கு நீயார்? மற்றவர்களினும் நீ எங்ஙனம் சிறந்தவன்? உனக்கு மாத்திரம் கொம்புமுளைத்திருக்கிறதோ? ஜீவராசிகளீனத்தையும் உனது சகோதரர்களாகப் பாவித்துக்கொள். பாவனையில் மாத்திரம் அல்ல, உண்மையாகவே, அவர்கள் உனது சகோதரர்கள். அப்படியிருக்க, நீ எப்படி "இல்லை" யென்று சொல்லலாம்?.

நமது பூர்விக இதிகாசங்களில் மகாபாரதம் என்றுள்ள நூலை நீ படித்திருக்கலாம், அல்லது கேட்டிருக்கலாம். மகாபாரதக்கதையை யறியாதவன் நமது தேசத்தில் இல்லவேயில்லை. அதில் கர்ணன் என்ற பெயருடையான், துர்யோதனனுக்கு உயிர்த்தோழன், அங்க தேசாதிபன்; "இல்லை" யென்ற பதத்தையும் பொருளையும், எப்பொழுதும் அறியாதவன். பாரதயுத்தம் பதினேழாம் நாட் சண்டையில் தனக்குக் கிடைத்திருந்த இரண்டொரு சாபவலியால் வில்விழந்து தேரிழந்து வெற்றியிழந்து பிரமித்து

நிற்கும்பொழுது, அவன் அதிகாறும் செய்துள்ள எண்ணற்ற தான தர்மங்களெல்லாம் தெய்வசக்திகளாகி அவனைச் சூழ்ந்து நின்றுகொண்டு, அர்ச்சுனன் எய்யும் பாணங்களை யெல்லாம் அப்படியப்படியே விழுங்கிக்கொண்டிருந்தன. அந்தத் தர்மதேவதையின் வலியால் கர்ணன் அர்ச்சுனன் கண்கட்கு தர்மராஜனைப் போலவே தோற்றினன். பார்த்தாயா? என்ன ஆபத்து வந்தபோதிலும், எவருடைய சாபம் பலித்தபோதிலும் தர்மதேவதையை ஜயிப்பதற்கு எவரால் முடியும்? அர்ச்சுனனுடைய கண்கள் எதிரில் எதிர்த்து நிற்பது தர்மராஜனே யென்று கலக்கமுற்றனன். அர்ச்சுனனுடைய கைகள் அம்புகளைச் சராமாரியாகப் பொழிந்து பொழிந்து அயர் வெய்தின. பார்த்தான் பார்த்தசாரதி "சரி, சரி! அர்ச்சுனா, சற்றுநேரம் யுத்தத்தை நிறுத்திவை. கர்ணன் தர்மதேவதையால் ரட்சிக்கப்படுகிறான். இப்பொழுது அவனைக் கொல்வதற்கு உன்னாலும் ஆகாது, என்னாலும் ஆகாது, எவராலும் ஆகாது, சற்று பொருத்திரு, நான் போய்வருகிறேன்". என்று பிராஹ்மண வேடம்தரித்து,கர்ணனிடம் சென்று "யான்வறுமையால் பீடிக்கப்பட்டு வாடுகின்றேன். இப்பொழுது உன்னால் இயைந்தது யாதேனும் ஒன்று கொடு" என்றுகேட்டார். கர்ணன் தன்னிடத்தில் கொடுப்பதற்கு ஒன்றுமில்லையே யென்றுதிகைத்து "பிராஹ்மணோத்தமரே! இங்கு என்னிடத்துள்ளது யாது கேட்பினும் கொடுப்பேன்" எனலும், மாயப்பிராஹ்மணன் "நீ இந்த நிமிஷம் வரையில் செய்துள்ள தர்மத்தையெல்லாம் எனக்கு அளிப்பாய்" என்று நாகூசாமல் கேட்டான். உடனே கர்ணன் அளவிலா ஆநந்தமடைந்து, தனது மார்பில் தைத்து முதுகுப்புறமாக உருவிப்போயிருக்கும் அஸ்திரத்தைப் பிடுங்கவே, இரத்தம்பாய்ந்தது; அந்தரத்தத்தினால் தான்செய்த தர்மங்களையெல்லாம் அந்த மாயப் பிராஹ்மணனுக்கு தர்த்தஞ் செய்துவிட்டான். கிருஷ்ணன் கர்ணனுடைய மனஞ்சலியாக் கொடைக்கு மிக மகிழ்ந்து, அவனுக்கு தனது யதார்த்தசர்சனம் அளித்து "உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்டுக்கொள்" என்றார். அப்பொழுது அவன் "அல்லல்வெவ் வினையா லின்னமுற் பவமுண் டாயினு மேமெழு பிறப்பு, மில்லையென் றிரப்போர்க் கில்லையென் றுரையா விதய நீ யளித்தருளென்றான்", எத்தன்மையதானவேண்டுகோள்? பார்த்தாயா? "இல்லை" யென்னுமே. "இல்லை" யென்று கர்ணன் ஒருபொழுதும் சொன்னதில்லை. ஆதலாலேதான், அவன்தனது இறுதிக்

காலத்தில் பரமாத்தும தர்சனம் செய்து பரமபதமடைந்தான். "ஏற்பதிகழ்ச்சி" யென்றார் ஔவையார். ஏற்பவருக் கில்லையென்பது அதனினும் இகழ்ச்சியன்றோ? ஆதலால் இல்லையென்னாதே.

ஆனால் எவர் எது பெறுதற்குத் தகுதியுடையவரோ, அவருக்கு அதைக்கொடுத்தலே சிறந்ததாகும். "பாத்திரமறிந்து பிச்சையிடு" யென்றார் பெரியோர். அபாத்திரத்தில்தர்மஞ் செய்வோர் பாபத்தொழில் கட்குக் கூடப் பாத்திரமாய் விடலாம். ஒரு சமயத்தில் அர்ச்சுனனும் கிருஷ்ணனும் ஒன்றாயுட்கார்ந்திருக்கும் பொழுது, ஒரு செம்படவன் ஒரு தங்கக்கட்டியை யேந்திக்கொண்டு வந்து அர்ச்சுனன் முன் பாகவைத்துத் தாங்கள் அன்று ஒருநாள் எனக்குக் கொடுத்த ஒரு பைசாவினால் நான் பெருத்த ஊதியம் பெற்றேன் தங்களிடத்து எனக்குள்ள நன்றி யறிதலினால் இதனைத்தங்களுக்குக் கொண்டுவந்தேன்" என்றான். அர்ச்சுனனுக்கு ஒன்றும் ஞாபகமில்லை. கிருஷ்ணன் செம்படவனை விசாரித்தார். அவன் தான் சில காலங்கட்கு முன்பு பசியால் மிகவருந்தி அர்ச்சுனனிடஞ்சென்றுயாசகம் கேட்டதாகவும், அர்ச்சுனன் ஒரு பைசா கொடுத்ததாகவும் தான் அப்பைசாவுக்குஒரு சிறுதூண்டில் வாங்கி மீன் பிடிக்க ஆரம்பித்ததாகவும், பிறகு அத்தொழிலிலேயே விருத்தியடைந்து தனவந்தனானதாகவும் கூறினர். அப்பொழுது கிருஷ்ணன் அர்ச்சுனனை நோக்கி "நீ என்ன மகத்தானபாபத்தைச் செய்து விட்டாய்? நீ இவனுக்குக் கொடுத்தபைசா எத்தனை மீன்களை கொல்கிறதற்குக் காரணமாய் விட்டது. இந்தக் கொலைப் பாபத்தில் ஒரு பாகம் உன்னையும் சார்கின்றது" என்றார். பாத்திரமறிந்து கொடுக்காததினால் நேரிடும் பாதங்கள் அளவற்றன. கிருஷ்ணன் தான் தரித்திரத்தால் பீடிக்கப்பட்டதாகக் கூறி யாசகம் கேட்க, தரித்திரத்தை நிவிர்த்திக்கும் படியான பொருள் எதுவோ அதையே கர்ணன் கொடுத்திருக்கவேண்டும்; அது கைபிலில்லையெனறால், தரித்திரனுடையவறுமை நீங்கவேண்டுமென்று எம்பெருமானைக் குறித்து ஸ்தோத்திரம் செய்பலாமே யொழிய அனுவசியமான பொருள்களைக் கொடுத்தல் கூடாது. கர்ணன் தானே தன்னுடைய பகுத்தறிவின்றிய தர்மச் செய்கையினால் தன்னைக் கொன்று கொண்டானே யொழிய, அர்ச்சுனனால் கொல்லப்படவில்லை. அவன் தான் அன்றுவரை செய்திருந்த தர்மங்களைக் கிருஷ்ணனுக்கு அளிக்காம லிருந்தால், மகாபாரதயுத்

தம் இன்னும் ஓய்ந்திராது. தர்மசக்தியை எதிர்த்து நிற்பதற்கு எவரால் முடியும்? இல்லையென்னாதே; ஆனால் பாத்திரமறிந்து கொடு. குளிரினால் நடுக்குற்று வருந்தும் ஒருவன் உன்னண்டை வந்து தான் போர்த்திக் கொள்வதற்கு ஒரு கம்பிளி கேட்க, நீ அவனுக்கு வேண்டிய கம்பிளியைக் கொடுக்காமல் அவனுடைய கைநிறைப் பணம் கொடுத்தனுப்பினால், அவனுடைய குளிர் நிவிர்த்தியாகிறதில்லை; அவன் அந்தப்பணத்தைத் துன்மார்க்கங்களில் செலவு செய்தானாயின அவனுடைய பாபகர்மங்களில் உனக்கும் பங்கு உண்டு. ஆதலால் பாத்திரமறிந்து கொடு.

சோறு இடு. எவர்க்கும் இல்லையென்னாதே. சோறு இடுவதில் இன்னாருக்குத்தான் இடவேண்டுமென்று வித்தியாசம் இல்லை. எவர் பசியினால் பீடிக்கப்படுகின்றார்களோ, அவர் அன்னதானத்திற்குத் தக்க பாத்திரமாவார். சோடச தானங்களிலும் அன்னதானம் மிகச்சிறந்தது. வேறு எப்பொருளைத் தானம்செய்தாலும், அப்பொருளைப் பெறுவோர் இன்னும் அதிகம் கிடைக்காதா? என்ற ஆசையையுடையவர்களாயிருக்கிறார்கள். ஆனால் அன்னதானமோ, வயிறுநிறைந்தவுடன் சாப்பிடுபவர் போதும், போதும் என்று சொல்லச் செய்துவிடுகிறது. இதுவே திருப்தியுறச் செய்கிறது. சாப்பிடுவது பஞ்சபட்ச பரமான்னமாயினும், வயிறு நிறைந்தவுடன் இன்னும் வேண்டுமென்றுசொல்பவரில்லை. அன்னதான பலனே மிகச்சிறந்தது. கர்ணனுடைய அந்திய காலத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் அவனுக்குத் தர்சனம் கொடுத்தபொழுது, கர்ணன் தனக்கு மிகவும் தாகமாயிருக்கிறதென்றுகூற, கிருஷ்ணன் தீர்த்தம் கொண்டுவந்து கர்ணனுடைய கைகளில் ஊற்ற, தீர்த்தமானது பொன்னாகமாறிவிட்டது. கர்ணன் தாகம் பொறுக்கமுடியாது தவித்து, இப்படித் தண்ணீர் பொன்னாக மாறியதற்குக் காரணமென்னவென்று கிருஷ்ணனைக்கேட்க, கிருணன் "நீ அன்னதானம் செய்ததில்லை; சொர்ணதானம் தான் செய்திருக்கிறாய்; ஆகையினால்தான் தண்ணீரும் உனக்குப் பிரயோசனப்படுகின்றதில்லை. ஆனால் நீயொருகாரியம் செய்திருக்கிறாய். முன்னொருதரம் ஒரு பிராஹ்மணன் உன்னிடத்தில்வந்து அன்னம் கேட்க, நீ உனது சுட்டுவிரலினால் எதிரில இருந்த தர்மராஜனுடைய அன்னசத்திரத்தைச் சுட்டிக்காட்டி, அங்கு சென்றால் அன்னம் அகப்படும் என்றுகூறி அனுப்பினாய். ஆதலால் அந்தச் சுட்டு விரலி

னிடத்தில்அன்னதான பலனிருக்கிறது. அதைவாயில் வைத்துக் கொண்டு சாப்பிட்டாயானல், நீர் ஊறும் என்றார். கர்ணனும் அப்படியே செய்துகொண்டான். அன்னமிடும் இடத்தைச் சுட்டிக் காட்டிய சுட்டு விரலுக்கே இவ்வளவு பலன் கிடைத் திருந்தால், உள்ளன் புடன் உபசரித்து அன்னமிடுபவர்கள் அடையும் பலனுக்கு ஓர் அளவும் கூற முடியுமோ? ஆகலால் பசித்தவர்க்கு இல்லை யென்னுதே.

ஒரு புராணிகர் இந்தத்திருஷ்டாந்தத்தை யெடுத்துப் பிரசங்கம் செய்துகொண்டிருந்தார். வேண்டிய திரவியமிருந்தும் எச்சிற் கையினலும் காக்கைபோட்டாத இழிஞன் ஒருவன் இதைக்கேட்டுக்கொண்டிருந்துவிட்டு சந்தோஷம் மிகுந்து உற்சாகபூரிதனுய்த் தன் வீடு நோக்கிச் சென்றான். மறுநாட் காலையில் அவன் திண்ணையி லுட்கார்ந்திருக்கும் பொழுது, ஒருவன் அவனைப் பிச்சை கேட்டான். சுட்டு விரல் அடைந்த புண்ணியம் தன் சரீரம் முழுதும் அடையவேண்டுமென்று விரும்பித் தன் சரீரம் முழுவதையும் ஆயிரங் கோணல்களாக நெளித்துக் கொடுத்துத் தன் சுட்டுவிரலினல் ‘ அதோ இருக்கிறதே, அதுதான் சத்திரம், அங்குபோ ’ என்றான். இந்த லோபியினுடைய அகங்காரத்தையும் குயுக்தியையும் கவனித்தாயா? இந்தச் சண்டாளன் அடுத்த ஜன்மத்தில மலத்திற்பிறந்து மலத்திலுழன்று, மலத்திலேயே மரிக்கும் புழுவாக ஜனித்தான்; இவன் புழுவைப்போல நெளிந்து காட்டினனல்லவா? ஆதலால் அகங்காரத்தையும் குயுக்தியையும் அகற்றிவிட்டு, பசித்தோர்க் கெல்லாம் அன்னம் இடு. இல்லையென்னுதே- இல்லை யென்னுதே. இல்லை யென்னுதே.

ஆர்க்கும் இடுமின்; அவர் இவர் என்னன் மின்;
பார்த்திருந் துண்மின்; பழம் பொருள் போற்றன் மின்;
வேட்கை யுடையீர்! விரைந்தொல்லை உண்ணன் மின்;
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே.—திருமந்திரம்.

ஜாதி தர்மம்.

ஸ்ரீ சிவசுப்ரமண்யம் அவர்கள் எழுதியது.

நமது தேசத்தில் ஜனசமுகமானது பற்பல ஜாதிகளாகப் பாகுபாடு செய்யப்பட்டிருக்கின்றதல்லவா? உலகில் வேறு எத்தேசத்திலும் இம்மாதிரியான வேறுபாடுகள் கிடையா. ஆதலால் இந்த ஜாதி வேறுபாடு இந்தியாதேசத்திற்கு இதுவரை நன்மையையே உண்டாக்கியிருக்கிறதா? அல்லது தீமையை விளைவித்திருக்கிறதா? நமது தேசத்தில் இப்பொழுது இவ்விஷயத்தைப்பற்றி இரண்டுகட்சிகள் ஏற்பட்டு ஒன்றுடனொன்று சண்டையிட்டு மண்டையுடைத்துக் கொண்டிருக்கின்றன. மேனாட்டாருடைய நாகரிகம் நமதுதேசத்திற்குள் நுழைந்து நமதுசகோதரர்களில் அநேகருடைய கண்களைக்கட்டி, மதிமயக்கித் தனக்கு அடிமையாக்கி விட்டது. இவர்கள் மேனாட்டார் சொல்வதே வேதவாக்கு எனக்கொண்டு அவர்களுடைய கொள்கைகளையே முழுமையும் பின்பற்றுகிறார்கள். இக்கட்சியார் நமது தேசமானது இங்கு ஏற்பட்டுள்ள ஜாதிவித்தியாசத்தினாலேயே இவ்வளவு தாழ்ந்த நிலைமைக்கு வந்துவிட்டது என்று கத்துகிறார்கள். இவர் ஒரு சாரார். நமது புராதனக்கொள்கைகளே சிரேஷ்டமென்றும் அவற்றினின்றும் அணுவளவாவது பிசகிவிட்டால், நமது ஜனசமுகம் அடியுடன் அழிந்துவிடுமென்றும் அக்கொள்கைகளை கைவிட்டதினாலேயே நமதுதேசம் இப்பொழுது இந்தநிலைமைக்கு வந்துவிட்டதென்றும் கூறுகிறார்கள். இவர்கள் புராதனக் கட்சியார்.

நாம் புராதனக்கட்சியார் கூறுவதெல்லாவற்றையும் சரியென்று ஒப்புக்கொள்ளவில்லையாயினும் அவர்கள் கட்சியிலேயே சேரவேண்டியவர்களாயிருக்கிறோம். மற்றெல்லாத் தேசங்களுடனும் நமதுதேசத்தை ஒத்திட்டு, இங்குமாத்திரம் ஜாதிபேதம் இருப்பதினால் இது தவறு என்றுகூறுதல் ஒருக்காலும் நியாயமாகாது. உலகில் எல்லோரும் பொய்சொல்லிப் பிழைக்க, ஒருவன் மாத்திரம் உண்மையையே உரைப்பானாயின் உண்மையுரைத்தது தவறாகுமா? எத்தனைதேசங்கள் பிரபலமாகக்கிளம்பி சிலநாட்களுக்குச் செழித்து வளர்ந்து செல்வமிகுந்திருந்துவிட்டுப் பின்னர் அழிந்துபோயிருக்க, நமதுதேசமானது அவற்றையெல்லாம் கண்ணுற்று, ஆநந்தமாயென்றென்றும் அமர்ந்திருப்பது ஆச்சர்ய

மல்லவா? இதற்குக்காரணம் நமதுமுன்னோர்கள் நமக்குப்பாரம் பரியமாக அளித்துவரும் சிருஷ்டிநீதிக் கொள்கைகளே.

மற்றத்தேசங்களில் ஜனசமுகமானது இன்னும் உருவமடைய வில்லை; தினந்தோறும் மாறுதல்கள் நடந்துகொண்டேயிருக்கின் றன. நமதுதேசத்தில் பல்லாயிரம் வருஷங்கட்கு முன்னரே நமது மூதாதைகளாகிய மகரிஷிகள் திரிகாலதர்சனம்செய்து காலதேச வியவகாரங்கட்கேற்றவாறு ஸ்மிருதிகளையுண்டாக்கி நமது ஜனசமுகத்தை ஜாதிநீதிகளால் ஸ்திரப்படுத்தினர்கள். ஒருசரீரத்திற்குப் பற்பல அவயங்கள் இருப்பதுபோல, ஜனசமுகமாகிய சரீரத்திற்கும் ஜாதிகளாகிய பற்பலஅவயவங்கள் அவசியமாகும். ஒரு ஜனசமுகமானது ஒரே சரீரமாகும். ஆதலால் அச்சரீரத்தில் எதாவது ஒரு அவயவத்திற்கு ஒருகெடுதி நேரிட்டுவிட்டால், மற்ற அவயவங்களுக்கும் கஷ்டம் ஏற்படும். சரீரமானது ஆரோக்கிடகாத்திரத்துடன் இருக்கவேண்டுமானல் அதன் எல்லா அவயவங்களும் சுகமாயிருக்கவேண்டும்; எல்லா அவயவங்களிலும் ரத்தஓட்டம் சமமாய் இருக்கவேண்டும். இல்லையேல், அச்சரீரம் அவலட்சணமுடையதும் வியாதியுள்ளதுமாய்விடும்.

இப்பொழுது நமதுதேசத்தில் நூதனமாகக் கிளம்பியிருக்கும் சீர்திருத்தக்கட்சியார் ஜாதிபேதத்தை யொழித்துவிடல் வேண்டும். எல்லாஜாதியாரும் ஒன்றுயுட்கார்ந்து உண்ணவேண்டும், விவாகவிஷயத்திலும் ஜாதிவித்தியாசம் பாராட்டலாகாது என்று பிரசங்கிக்கின்றனர். ஏ! சீர்திருத்தக்காரர்களே! ஒற்றுமை ஏற்படுவதற்காக எல்லாஜாதியாரும் ஒன்றுயுட்கார்ந்து உண்ணவேண்டும், ஒருவருடனொருவர் விவாகம் முதலிய சம்பந்தங்கள் செய்துகொள்ளவேண்டும் என்று நீங்கள் கூறுவதானல், இப்பொழுது ஐரோப்பாவைப் பாருங்கள். நமது சக்கரவர்த்தியாரும் ஜெர்மன் சக்கரவர்த்தியாரும் ஒன்றுயுட்கார்ந்து உண்ணுபவரல்லவா? நமது சக்கரவர்த்தியாரின் அத்தையையல்லவா ஜெர்மன் சக்கரவர்த்தியார் விவாகம்செய்திருப்பது? இப்படியிருந்தும்,ஏன் இந்தபயங்கரமான போர்ஏற்பட்டது? ஆதலால் ஜாதிக்கலப்பினால் ஒற்றுமை ஏற்படும் என்பது உங்களுடைய அகன்ற அறிவைக் காட்டவில்லை. காம, க்ரோத, லோபாதிகுணங்கள் மனிதனுடைய மனத்தினின்று அகலாதிருக்கும் வரையில் ஒற்றுமை எப்படி ஏற்படக்கூடும்? ஈஸ்வரசிருஷ்டியிலேயே பாருங்கள். தோற்ற

மெல்லாம் வெவ்வேறுயில்லையா? எல்லாம் ஒன்றுபோல் இருக்கின்றதா? இல்லையே. மனிதவகுப்பைப்பார். ஒருவருடைய நடையைப்போல மற்றவருக்கு இல்லை. ஒருவருடைய சப்தத்தைப்போல மற்றொருவருக்குஇல்லை. ஒருவருடைய வடிவத்தைப்போல மற்றொருவருக்கில்லை. இம்மாதிரியே சிருஷ்டிமுழுதும் வேறுபட்டுக்கிடக்கின்றன பார். சிருஷ்டியையும் சீர்திருத்தம் செய்யப்போகின்றீர்களா? இந்தப்பைத்திய எண்ணத்தையெல்லாம் விட்டுவிட்டு, ஹிருதயத்தை விசாலப்படுத்துங்கள், மனத்தைச்சுத்தம் செய்யுங்கள்.

நாம் தாழ்ந்தஜாதியாரைத் தகுந்தபடி நடத்தாமல் குரூரமாக நடத்திவருவதினால், அவர்களில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் அந்நியமதங்களைத்தழுவி விட்டார்கள். ஆனால் அதைப்பற்றியும் நமக்கு அக்கரையில்லை. தாழ்ந்த ஜாதியான்ஒருவன் அந்நியமதத்தைத் தழுவிக்கொண்டு ஜான் என்றோ ஜேம்ஸ் என்றோ பேர்வைத்துக்கொண்டு விட்டால், அவன் நம்முடையவீட்டிற்குள் தாராளமாய் வரலாம்; நாமும் அவனுக்குக் கைலாகுகொடுத்து உபசாரம் செய்கிறோம். இவ்விஷயம் நம்மால் கவனிக்கப்படவேண்டியது. அந்நியமதத்தில் அவன்சேர்ந்தபின் அவன் அடையும் ஸ்வதந்திரங்களை அவன் நமது மதத்திலிருக்கும் பொழுதே நாம் அவனுக்குக்கொடுத்துவிட வேண்டியது. இதனால் அவனுடன் விவாகசம்பந்தங்கள் செய்துகொள்ள வேண்டுமென்றாவது அவனுடன் ஓர்இலையில்உட்கார்ந்து சாப்பிடவேண்டுமென்றாவது நாம் சொல்லவரவில்லை.

தொழிற் பேதங்களினால் ஜாதி பேதங்கள் ஏற்பட்டனவென்று தற்கால பண்டிதர்கள் பலர் கூறுகின்றார்கள். குணத்தை முன்னிட்டும் கர்மத்தை முன்னிட்டுமே ஜாதி ஏற்பட்டதென்று நமது ஸ்ருதி ஸ்மிருதிகளும் கூறுகின்றன. குணத்தை முன்னிட்டு ஜாதி ஏற்பட்ட விஷயத்தைப்பற்றிப் பின்னர்ச்சிந்திப்போம். இப்பொழுது தொழிலினால் ஜாதி விவகாரம் உண்டான விதத்தைப் பார்ப்போம். ஜாதிகள் ஜனசமூக சரீரத்தின் வெவ்வேறு அவயங்கள் என முன்னமேயே கூறியுள்ளோம்.

ஒரு ஊரில் ஜனத்தொகை பதினாயிரம் பேர் என்றால், அந்தப் பதினாயிரம் ஜனங்களுக்கும் வேண்டிய ஆடை முதலியன நெய்து வருஷந்தோறும் கொடுப்பதற்கு நெசவு காரர் எத்தனை

பேர் வேண்டுமென்றும் எண்ணெய்ச் செக்கிலிட்டு எண்ணெய் ஆட்டி இந்த பதினாயிரம் பேருடைய உபயோகத்திற்கும் கொடுப்பதற்கு எத்தனை பேர் வாணியர் வேண்டுமென்றும் இம்மாதிரியே ஒவ்வொரு தொழிலுக்கும் இத்தனை இத்தனை பேரென்று கணக்கிட்டு, ஜனசமூக க்ஷேமத்தைக் கோரி, அவரவர்களுடைய மனோ இயற்கைக்குத் தக்க பிரகாரம் தொழில் ஏற்படுத்தி, ஒரே தொழிலாளர்களை ஒரு ஜாதியினர் என்று நியமித்தார்கள் நமது முன்னோர்கள். எல்லாத் தொழில்களும் இன்றியமையாதனவாம். ஆதலால் ஒரு தொழிலைவிட மற்றொரு தொழில் எவ்விதத்திலும் சிரேஷ்டமன்று. ஒரு சரீரத்தில் ஏதேனும் ஒரு அவயவத்தை விட மற்ற அவயவம் சிரேஷ்டமென்று எப்படிக்கூறுவது? குதத்துவாரத்தில் மலங்கழிகின்றது என்று ஒருவரும் அதை வெட்டியெறிந்து விடக் காணவில்லை. ஆனால் அக் குதத்துவாரத்திலும் வியாதி ஏற்பட்டு விட்டால், சரீரம் முழுதும் பாதிக்கப்படுகின்றது. அக் குதத்துவாரமானது தனது தொழிலினால் தன்னை எல்லோரும் இழிவாகக் கருதுகிறார்களென்று அறிந்து "வேலை நிறுத்தம்" செய்து விட்டால், மரணத்தைத் தவிர வேறு கதியுண்டோ? அது போலவே, நாம் ஒரு தொழிலாளியை அவன் செய்யும் தொழிலினால் இழிவாகக் கருதி அவமானமாக நடத்தினால், அவன் அந்தத் தொழிலைச் செய்வதற்குப் பிரியப்பட மாட்டானல்லவா? நாவிதர்கள் எல்லோரும் க்ஷவரம் செய்வதில்லையென்று தீர்மானித்து விட்டால், நமது நாகரிகம் பறந்துவிடுமல்லவா? நாம் 'தாடி மியான்' சாய்புகளாய் விடுவோமே. காலில் முள் தைத்தால், உடனே கண்ணில் நீர் பெருகுகின்றது; கையானது விரைவில் காலினிடத்துச் சென்று அதைப்பிடித்துக் கொள்கின்றது. அது போலவே நமது ஜனசமூகத்தில் ஒரு ஜாதியினருக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை மற்ற ஜாதியார் உணர்ந்து அவர்களுக்கு உதவி புரிய வேண்டும். ஆதலால் எத்தொழிலாளரையும் நாம் இழிவாகக் கருதலாகாது. தீயதொழில்களைப் புரிந்து திரிவோர்களே தாழ்ந்தவர்களாவார்கள். தம் நன்மையையும் பிறர் நன்மையையும் கருதிக் குற்றமற்ற தொழில்களைச்செய்து பிழைப்போர்களைத் தாழ்ந்தோர் என்று கூறுதல் ஈஸ்வர சம்மதமாகாது.

கோடைகாலமும் கோடை ஜனங்களும்.

இப்பொழுது கோடைகாலம். சூர்யன் ஈவிரக்கமின்றித் தனது பூரணசக்தியையும் விளக்கி எரித்துக் கொண்டிருக்கிறான். இப்பொழுது அவன் தன்னரசுசெய்யும் காலம். புல், பூண்டுகள், செடி, கொடிகள் எல்லாம் வாடி வதங்குகின்றன; பூமியோ கொதிக்கின்றது. பூர்வ புண்ணிய அதிர்ஷ்ட வசத்தினால் சகல சௌகர்யங்களும் வாய்க்கப்பெற்றுச் சாய்வு நாற்காலிகளில் சாய்ந்துகிடக்கும் பிரபுக்களே! மின்சார விசிறிகொண்டு மேனியைப் பதனப்படுத்தும் பிரபுக்களே! நல்ல நடுமத்தியான வேளையில் ஜன்னல் கதவுகளைத் திறந்து சற்று வெளியுலகத்தை யெட்டிப்பாருங்கள்! ஓ! ஓ! உலகமெல்லாம் தீப்பிடித்து எரிகின்றது. உங்களவ்வளவு சௌகர்யங்கள் வாய்க்கப்பெறாத சகோதர ஜீவராசிகளுடைய சரீரமும் மனமும் ஆதவனுடைய அனலில் உருகுகின்றனவே! ஜலத்தைத் தொட்டால், ஜலமும் சுரீரென்று சுடுகின்றது. இவ்வளவு கடிய கோடைகாலத்தில் நமது சென்னையரசாங்கத் தலைமையதிகாரிகள் ஆதித்தனுடைய அனலம்புகட்குப் பயந்து நீலகிரியைத் தேடியோடுகின்றார்கள். இப்படி யிவர்கள் மாத்திரம் சுகவாசம் செய்வதற்குச் செல்வது அவ்வளவு மெச்சத்தக்க கார்யமன்றென்றும் அதுவும் ஐரோப்பிய யுத்தத்தினால் மிதமிஞ்சிய செலவு ஏற்படுகின்ற இக்காலத்தில், இவ்வருஷத்தில் நீலகிரிக்குச் செல்வது உசிதமன்றென்றும் சட்ட சபையங்கத்தினர்களிற் சிலர் ஆட்சேபிக்க, நமது கவர்னரவர்கள் இவ்விஷயம் கட்சிப் பிரதி கட்சிகளை யுண்டாக்கக் கூடிய விஷயமென்று இந்த யுத்த சமயத்தில் இத்தகைய விஷயம் பிரஸ்தாபிக்கப்படுதல் கூடாதென்றும் கூறி ஆட்சேபனைகளை யடக்கி விட்டார். இவ்விதமாகச் சாக்குப்போக்குச் சொல்லியாவது, ஒரே பிடிவாதமாக உதகமண்டல (இது நீலகிரியில் பிரதானபட்டணம்) வாசம் அவசியமேயென்று அரசாங்கத்தார் தீர்மானித்துக் கொண்டு, அப்படியே அங்கு சென்று விட்டார்கள். இப்பொழுது இவர்கள் இப்படிச் செய்தது நியாயமா? நியாயமன்றா? என்பதைப்பற்றி நாம் பேசவரவில்லை. எல்லாருக்கும் உயிர் "வெல்லம்" அல்லவா? சூர்ய வெப்பத்தால் உயிர் உறிஞ்சப்படும் பொழுது, தப்பியோடச் சக்தியும் சௌகர்யமுமுள்ளவர்கள் தங்களுடைய சுகத்தைக் கவனிக்கவே செய்வார்கள்.

"மைசூர்ப்புலி" யெனப் பட்டப் பெயர்பெற்ற டிப்பு சுல்தானும் இம்மலையின் மீது கோடைகாலவாசம் செய்தாரென்று அறிகிறோம். ஆனால் அவருடைய காலத்தில், அம்மலையின் மீது சரியான ரஸ்தாக்கள் கிடையாது. அவர் 'தூளி' யின்மீது படுத்துக்கொண்டு மனிதர்களால் சுமந்தெடுக்கப்பட்டுச் சென்றிருப்பார். இப்பொழுது நாகரிகம் விருத்தியாக ஆக, யந்திர சக்தியினால் ரஸ்தாக்கள் போடப்பட்டு விட்டன. உதகமண்டலம் வரையில் ரெயில்வண்டிகள் செல்கின்றன; வருஷந்தோறும் அரசாங்கத் தலைமையதிகாரிகள் அங்குவாசம் செய்யத்தான் வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டபிறகு, அங்கு போக்குவரவிற் கேற்ற சௌகர்யங்கள் ஏற்படாமற் போகுமா? உதகமண்டலம் என்ற பெயரே குளிர்ச்சியைக் குணமாகவுடைய இடம் என்பதைச் சூசிப்பிக்கின்றது. (உதகம் என்னும் பதத்திற்கு நீர் என்பது பொருள்). எப்பொழுதும் எந்த பார்த்தாலும் பச்சைப்பசேலென்று விருட்சாதி செடி கொடிகள் நிறைந்து பலநிறப்புஷ்ப ஜாதிகள் பரிமளத்தை வாரி வீசிநிற்க, எங்கும் ஜில்லென்று இன்பத்தை யளித்துத் துன்பத்தைப் போக்கும் இடம் உதகமண்டலமாகும். இம்மலைப் பிரதேசத்தில் விஷஜந்துக்கள் கிடையா. உதகமண்டலத்திற்குப் புதிதாகச் செல்பவர்களுக்கு அப்பிரதேசத்தின் சீதோஷ்ண ஸ்திதி ஒத்துவருவது சிறிது சிரமம் போலத்தானிருக்கும். சிலர்குன்னூரில் போயிருப்பார்கள். உதகமண்டலத்தை விடக் குன்னூரில் செலவு சுருக்கம். இந்தியாவில் ஐரோப்பியர்களால் ஸ்தாபிக்கப்பட்ட மலை நகரங்களில் மிகப் பழமையானது உதகமண்டலம்.

இப்பிரதேசத்தில் தொன்றுதொட்டு வசித்துவரும் ஜாதியார் தோடர்கள் எனப்படுவர். இவர்கள் எங்கிருந்துவந்து இம்மலையிற் குடியேறினர்களென்றும் எப்பொழுது வந்தார்களென்றும் ஒருவருக்கும் தெரியவில்லை. இவர்கள்உயரமாக வளர்ந்தவர்கள்; நல்ல சரீரக் கட்டுடையவர்கள்; ரோம அடர்த்தியுள்ளவர்கள்; கபிலநிறமானவர்கள். பெருங் கடியாரங்களின் கீழ் தொங்கும் (ஆடு)பக்திரத்தைப் (பெண்டுலம்) போன்ற தாடியையும் அழுக்கடைந்த தலையையும் உடைத்தா யிருப்பது அவர்களுக்கு ஒரு பெருமை. ரோமங்கள் சுருள் விழுந்திருப்பது அவர்களுக்கு ஒரு அழகு; ஆகலால் தோடஜாதி ஸ்திரீகள் வேண்டுமென்றே தங்களுடைய

கூந்தலைச் சுருள் செய்துகொள்வார்கள். அவர்கள் ஸ்வபாவத்தில் வியவசாயிகள். அவர்களுடைய சொத்துக்கள் எருமைமாடுகள் தாம். இவ்வெருமை மாடுகள் மிகப்பெரியனவாயும் துஷ்ட ஸ்வ பாவம் வாய்ந்தனவாயும் இருக்கின்றன. தங்களுடைய சொந்தக்கா ரர்களைத் தவிர, வேற்றுமனிதர் எவரேனும், இவற்றினருகில் செ ன்ருல், அவை சரோமாக எதிர்த்துக் குத்தும்; ஆனால் தங்கள் சொ ந்தக்காரர்களிடத்திலோ அதிக பயத்துடனும் அன்புடனும் கீழ்ப் படிந்து நடக்கின்றன. இம்மலைப் பிரதேசத்தின் காட்சிகளாகிய இவற்றையெல்லாம் கண்டுகளிக்க விரும்புவோர், இவ்வெருமை மாடுகளிடத்தில் மிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்; அறியாமல் அருகில் சென்று விட்டாலோ, வந்தது அநர்த்தம், ஆதலால் ஜாக்கிரதை! ஜாக்கிரதை! இவற்றினிடத்தில் பால் கறப்பது மிகப் பரிசுத்தமான காரியமாகக் கருதப்படுகிறது. ஸ்திரீகள் இவ்வெரு மைகளுக்குச் சமீபத்திலாவது அல்லது இவற்றின் பாலுக்குச் சமீபத்திலாவது போகக்கூடாதாம். புருஷர்களும் பால்கறத்தலா கிய பரிசுத்தமான தொழில்களைச் செய்யும்பொழுது கௌபீனத் தைத்தவிர, மற்றெல்லா ஆடைகளையும் களைந்துவைத்து விடுகிருர் கள்.

இந்த ஜாதியாருக்கு எருமைகள் மிகப்பரிசுத்தமான மிரு கங்கள்; அவற்றின் பாலும் பரிசுத்தம். இந்தப்பாலை அவர்கள் உப யோகிக்கவும் கூடாது, விற்கவும் கூடாதாம். ஆனால் இவர்கள் பிரத்தியேகமான கட்டடங்களில் இந்தப்பாலைக் கொண்டுபோய் வைத்து அங்கு சில சடங்குகள் புரிந்து இந்தப்பாலை நெய்யாக்கு வார்கள். நெய் பரிசுத்தமன்று, ஆதலால் அதை உபயோகப்படுத் திக்கொள்வார்கள்.

அவர்கள் இன்னமதத்தைச்சேர்ந்தவர்களென்று ஸ்திரமாகச் சொல்லமுடியவில்லை. அவர்களுக்கு எண்ணற்ற தேவதைகள் உண்டு; ஆனால் ஒரு தேவதையிடத்திலும் பக்திவிஸ்வாசம் இல்லை. அவர்கள் விக்கிரகாராதனை செய்கிறதும் இல்லை. அவர்கள் சூர் யனை வணங்குகிருர்கள். அவர்களுடைய முக்கியமான மதக்கொள் கைகள் அவர்களுடைய எருமை மாடுகளைப்பற்றித் தாம். முக் கியமான எருமைகளின் கழுத்தில் பரிசுத்த மணிகள் கட்டப்பட் டிருக்கும்.

தோட ஜாதியார்களுக்குள் மந்திரவாதம் செய்யும் வழக்கம் உண்டு. அவர்கள் புநர்ஜன்மக் கொள்கையை அறியார்கள். மரித்தவர்கள் இதைப்போன்ற இன்னொரு உலகத்திற்குச் செல்கிறார்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள். அவர்களுடைய இந்த வழிப்பிரயாணத்திற்கு உதவும்படியாக எருமை மாடுகள் கொல்லப்படுகின்றன. ஒருவன் இறந்துவிட்டால், அப்பிணத்தருகில் ஒரு எருமைமாடு கொண்டுவந்து வைக்கப்பட்டுக் கொல்லப்படுகிறது. அங்கு கூடிய தோடர்கள் அவ்வெருமை மாட்டுத் தலையைத் தடவிக்கொடுத்து, "ஐயோ, உனக்கு இவ்விதி வாய்த்ததே" என்று அழுவார்கள். ஒரு சமயத்தில் அநேக எருமைமாடுகள் கொல்லப்படுவதுமுண்டு. நமது ஆங்கில அரசாட்சியார் இவ்விஷயத்தில் பிரவேசித்து, இத்தனை எருமைமாடுகள் தான் கொல்லப்பட வேண்டும் என்று விதி ஏற்படுத்தியிருக்கிறார்கள்!

இதோட ஜாதிஸ்திரீகள் ஒரே சமயத்தில் பல புருஷர்களையும் கணவர்களாகக் கொண்டிருப்பார்கள். சொந்தப் புருஷர்களாக வரித்துக் கொண்டிருப்பவர்களைத் தவிர, அடிக்கடி வந்து போகும் வைப்புப்புருஷனாக ஒருவனை எல்லோரும் அறியவைத்துக்கொள்வது வழக்கம். ஸ்திரீ ஸ்வதந்திரம் இங்கு தான் பிரபலமாயிருக்கிறது. அவர்களுடைய ஜனசமூகக் கட்டுப்பாடு குலையாமலிருக்கும் பொருட்டு, பெண்சிசுக்களைக் கொலைபுரிந்து விடுதல் வழக்கத்தில் இருந்தது. ஜன சமூகம் அழிந்துவிடாமலிருக்கும் பொருட்டுப் போதுமான ஸ்திரீகள் வைத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

தோடர்கள் மிகுந்த நல்லகுணமுள்ளவர்கள். அவர்கள் யாதொரு குற்றமும் புரிகின்றதில்லை. எல்லோரும் ஒன்று கூடி ஏகமாய் வாழ்கின்றார்கள். ஸ்திரீகளையும் எருமைகளையும் மிகப் பட்சத்துடன் நடத்துகிறார்கள். அவர்கள் மிகப் புத்திசாலிகள்; ஆனால் அவர்களுக்குப் பாஷாஞானம் கிடையாது. இவர்கள் பழையகாலத்து மனிதர்களாகையால், இவர்களிடத்து ஆடம்பாதிகள் இல்லை; கர்வம் இல்லை; டம்பம் இல்லை; இவர்கள் கபடமற்றவர்கள்; சூது வாது தெரியாதவர்கள். ஆனால் எங்கும் வியாபித்துப் புராதனப் பொருள்களையும் கொள்கைகளையும் விழுங்கி ஏப்பமிட்டுப் இறுமாந்து திரியும் தற்கால நாகரிகமானது இவர்களையும் பீடிக்க ஆரம்பித்து விட்டது. மூங்கிலினால் தாங்களே ஆக்கிய கூடைகளையும் பெட்டிகளையும் உபயோகித்து வந்த இவர்கள் இப்பொழுது

மண்ணெண்ணெய் நிரப்பி வருகின்ற தகரங்களை உபயோகிக்க ஆரம்பித்து விட்டார்கள். இந்தியாவின் புராதன ஜனங்களில் ஒரு வகுப்பாகிய இவர்கள் இன்னும் உலகில் உயிர் வாழ்ந்திருப்பது நமக்குச் சந்தோஷத்தையும் பெருமையையும் அளிக்கின்றது. இத்தகைய ஜனங்கள் சிருஷ்டி யாரம்பம் முதல் வாசம் செய்து வரும் நீலகிரிப் பிரதேசமே இப்பொழுது நமது நாட்டுத் தனவந்தர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் கோடைகால வாசஸ்தானமாயிருக்கின்றது.

முழுமூடன்.

(ஒரு டழங்கதை.)

இரண்டு ஸ்நேகிதர்கள் தெரு வழியே போய்க் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு கிழவி அவர்களைப் பார்த்து இரண்டு கைகளையும் கூப்பிக் கும்பிட்டாள். இவ்விருவரில் ஒருவன் தன்னைத்தான் கும்பிட்டாளென்று பெருமை பாராட்டிக் கொண்டான் மற்றவன் "அன்று, அன்று, அவள் என்னைத்தான் கும்பிட்டாள்" என்றான். இவ்விஷயத்தைப் பற்றி இவ்விருவருக்குள்ளும் மிகுந்த வாக்குவாதம் நடந்தது. ஆயினும் இவர்களுடைய தாக்கம் முடிவை யடையவில்லை ஆகையால் அவர்கள் 'இருவரும் அந்தக் கிழவியின் பின்னேயே ஓடி, அவளை வழி மறித்துக்கொண்டு "நில்லு, அம்மா! எங்களுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்து செல்" என்றார்கள். அந்தக் கிழவி "சங்கதி யென்ன" என்றாள். இவர்கள் "தாயே! நீ யாரைக் கும்பிட்டாய்?" என்று கேட்டார்கள். அதற்குக் கிழவி "உங்கள் இருவரில் முழுமூடன் எவனோ அவனைத்தான் கும்பிட்டேன்" என்றாள். அப்பொழுது இவ்விருவரில் ஒவ்வொருவனும் நானே முழுமூடன், நானே முழுமூடன் என்று சொன்னான். அந்தக் கிழவி "உங்களுடைய வெறும் பேச்சிலிருந்து நான் எவன் முழுமூடனென்று எப்படிக் கண்டு பிடிப்பது? ஆதலால் உங்களுடைய பூர்வோத்தர கதைகளில் ஏதாவதொன்றைச் சொல்லுங்கள், பார்ப்போம்" என்றாள்.

அப்பொழுது ஒருவன் கூறியதாவது:— "கோடைகாலம், வெயில் அதியுக்கிரமாயிருந்தது. அப்பொழுது ஒரு தோட்டத்தில் நான் உலாவிக் கொண்டிருந்தேன். வெயிலின் உஷ்ணம் பொறுக்க முடியாது, சிரமபரிகாரம் செய்து கொள்ள உத்தேசி

த்து ஒரு கிணற்றோரத்தில் படுத்தேன்; உறங்கிவிட்டேன். சிறிது நேரம் கழித்து விழித்துக் கொண்டேன். என் தலைப்பாகை கிணற்றுக்குள் விழுந்து கிடந்தது; என் செருப்புக்களைக் காணவில்லை. தலைப்பாகையும் இல்லாமல் செருப்பும் இல்லாமல் அதியுக்கிரமாக அடித்துக் கொண்டிருந்த வெயிலில் வீட்டுக்கு எப்படித் திரும்பி வருவது? இன்னது செய்வதென்று தோன்றாமல் விழித்தேன். என்றாலும், மனத்தைத் தைரியப்படுத்திக்கொண்டு, என் இருகைகளாலும் தலையைமூடிக்கொண்டு, வெறுந் தலையுடனும் வெறுங்கால் களுடனும் வீட்டிற்கு வேகமாக ஓடினேன். என்னுடைய வீட்டு வாசலில் என் வேலைக்காரி நின்று கொண்டிருந்தாள். நான் இம்மாதிரி ஓடி வருவதை அவள் கண்டதும் தாரை தாரையாகக் கண்ணீர் பொழிந்து கொண்டு எனது மனைவியிடத்திற்குச் சென்று "அம்மா! எஜமானன் தலைவிரி கோலமாக ஓடி வருகிறார். 'தலைவிதி, தலைவிதி' யென்று தலையிலடித்துக் கொள்கிறார். ஏதோ பெருங் கெடுதல் சம்பவித்திருக்கின்றது" என்றாள். இவ்வார்த்தைகளைக் கேட்ட எனது மனைவி கோவென்று அலறியழத் தொடங்கினாள். எனது பெற்றோர் அழுதார்கள். எனது மாமியாரும் மாமனாரும் அழுதார்கள். எனது மைத்துனர் அழுதார்கள். எனது சகோதரர்களும் சகோதரிகளும் அழுதார்கள். எனது குழந்தைகளும் அழுதார்கள். இந்தச் சத்தத்தைக் கேட்டு ஓடி வந்த அண்டையயல் வீட்டுக்காரர்களும் கூடயழுதார்கள். கிழவிகள் ஒப்பாரி வைத்து அழுதார்கள். குமரிகள் மூக்கைச் சிந்திச் சிந்தி அழுதார்கள். புருஷர்கள் தேம்பித் தேம்பி யழுதார்கள். குழந்தைகள் விம்மி விம்மி யழுதன. என் வீட்டிலிருந்த ஆடுமாடுகளும் "அம்மா, அம்மா" வென்று அலறின. எங்கு பார்த்தாலும் ஏக அழுகையாயிருந்தது. நான் வீட்டிற்குள் நுழைந்ததும் நானும் உருண்டு புரண்டு அழுதேன். நான் வீட்டிலில்லாத பொழுது ஏதோ ஆபத்து நேரிட்டிருக்கவேண்டுமென்று நினைத்தேன். இதுவே நான அழுததற்குக் காரணம். இவ்விதமாக எல்லாரும் ஒருமணி நேரத்திற்குக் குறையாமல் ஓயாமல் அழுதோம். பிறகு அண்டை வீட்டுக்காரன் ஒருவன் என்னைப் பார்த்து "ஏன், அப்பா, அழுகிறீர்கள்?" என்று கேட்டான். நான் "எனக்குத் தெரியாது. வீட்டில் கேளுங்கள்" என்றேன். அப்பொழுது எனது வேலைக்காரி ஐயா! நீங்கள் தலைவிரி கோலமாய் ஓடி வரவில்லையா? நீங்கள் அப்

படி வந்ததினால் தான் நாங்கள் அழுதோம்." என்றாள். உடனே நான் ஓடி வந்ததற்குக் காரணம் இன்னதென்று சொன்னேன். அப்பொழுது அங்கிருந்த எல்லோரும் என்னைப் பார்த்து "உன்னைப்போலொரு மூடன் உலகில் இல்லவேயில்லை" யென்றார்கள்.

மற்றவன் தன்னுடைய கதையைப் பின் வருமாறு சொன்னான்:— "எனக்கு விவாகமான வுடனே என் மாமனார் வீட்டில் என்னை விருந்துக்கழைத்தார்கள். அப்பொழுது எனது ஸ்நேகிதர்களிற் சிலர் "ஜாக்கிரதை, மாமனார் வீட்டில் நிரம்பவும் மரியாதையாகவும் கௌரதையுடனும் நடந்துகொள். நீ பட்டினியாய்ப் பசித்துக் கிடப்பதாகவும் அவர்களுக்குத் தெரியக் கூடாது. ஆகையால், சாப்பாட்டுவிஷயத்தில், ஜாக்கிரதை" என்று எனக்குப் போதித்தார்கள். நானும் அவர்களுடைய புத்திமதியின் படியே நடப்பதாகக் கூறிவிட்டு என் மாமனாரகம் சென்றேன். அங்கு எனக்கு ஆசார உபசாரம் செய்தார்கள். லட்டு, ஜிலேபி, முதலிய மிட்டாய் வர்க்கங்களும், வடை, முறுக்கு, தேன் குழல் முதலிய பட்சண வர்க்கங்களும் பாயஸாதி பரமான்னங்களும் பண்ட பலாதிகளும் ஏராளமாய் என் முன் கொண்டு வந்து வைக்கப்பட்டன. எனது நாவில் நீர் ஊறிற்று. அவற்றை யெல்லாவற்றையும் எடுத்தெடுத்து விழுங்கவேண்டுமென்று எனக்கு ஆசை மிகுந்த போதிலும், நான் என் ஸ்நேகிதர்களுடைய புத்திமதிக்குக் கட்டுப்பட்டவனாகி ஒவ்வொன்றிலும் சிறிது சிறிதுதான் எடுத்து வாயில் போட்டுக்கொண்டு ருசி பார்த்தேன். அதிகமாகச் சாப்பிடும்படி எனது மாமியார் எனக்கு உபசாரம் பண்ணினாள். "இல்லை, எனக்கு வயிறு வலிக்கின்றது, அஜீரணமாயிருக்கின்றது" என்று நானும் உபசாரம் செய்து கொண்டேன். அன்று நான் இவ்விதமாக வீண் உபசாரம் செய்து கொண்டு பட்டினி கிடந்தேன். நடு நிசிபாய பொழுது. எனக்குப் பசி தாங்க முடியவில்லை. ஆகையால் நான் ஒருவரும் அறியாமல் சமையலறைக்குச்சென்று "அங்கு தின்பதற்கு ஏதேனும் கிடைக்குமா?" என்று ஆராய்ந்தேன். எங்கு ஆராய்ந்தும் ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியாக அங்கு ஒரு மூலையில் சில கோழி முட்டைகள் தென்பட்டன. எத்தனை முட்டைகள் என் கைகளுக்குள் அடங்குமோ அத்தனையையும் எடுத்துக்கொண்டு எனது படுக்கையறையை நோக்கி யோடினேன். ஆனால் நான் ஓடின அவசரத்தில், எனது படு

க்கையறையின் நிலை தட்டி நான் தடுமாறிக் கீழே விழுந்தேன். நான் விழுந்தசப்தத்தில் வீட்டிலிருந்தவர்கள் எல்லோரும் விழித்துக் கொண்டார்கள். அவர்கள் "என்ன சங்கதி?" யென்று இரைந்து கொண்டே என் அறையை நோக்கி வந்தார்கள். அவர்கள் வருவதற்குள்ளாக, நான் எனது படுக்கையிற் சென்று படுத்துக் கொண்டேன். ஆனால் நான் திருடிய கோழி முட்டைகளை ஒளித்து வைப்பதற்கு நேரம் இல்லை. எனது திருட்டை எங்கே அவர்கள் கண்டுபிடித்து விடுவார்களோ என்று பயந்து, நான் அந்தக் கோழி முட்டைகளை யெல்லாம் எனது வாய்க்குள் திணித்துக் கொண்டேன். எனது வாய் பூசினிப்பழம் போலப் பெரிதாய் விட்டது; இருகன்னங்களும் உப்பியிருந்தன. எனக்கு மூச்சுத் திணறிற்று. அவர்கள் எனது படுக்கை யறைக்குள் நுழைந்து எனதுமுகம் பயங்கரமாக உப்பியிருப்பதைப்பார்த்துச் "சங்கதி யென்ன?" வென்று கேட்டார்கள். நான் பதில் கூறவில்லை; ஆனால் எனது வாயை இன்னும் இறுக்கமாக மூடிக்கொண்டேன். அவர்களுடைய கேள்விக்கு நான் பதில் சொல்ல ஆரம்பித்தால், எங்கே கோழி முட்டைகள் குதித்து விடுமோ என்று பயந்து நான் பேசவேயில்லை. எனது மாமியாரும் மற்றவர்களும் பலமாகச் சந்தேகித்து "ஐயோ! பாவம், பையன் பட்டினிகிடந்து பாதவிக்கிறானே, பசியினாலும் குளிரினாலும் வாய் வீங்கிப் போய் விட்டதே. ஐயையோ, வைத்தியனைக் கூட்டிக் கொண்டு வாருங்கள்" என்று அலறினார்கள். வைத்தியனும் வந்து சேர்ந்தான். அவனும் நான் மௌனமாயிருப்பதையும் கண்களில் விழி பிதுங்குவதையும் கன்னங்கள் புடைத்திருப்பதையும் கண்டு "இது மிகவும் அபாயகரமான வியாதி; கன்னத்தைக் கத்தியைக் கொண்டு கீறி, நீரை யெல்லாம் வெளிப்போக்கவேண்டும்" என்று சொல்லி, ஒரு கூரியகத்தியை யெடுத்து எனது வலது கன்னத்தில் குத்தினான். என் வாய்க்குள் இருந்த ஒரு முட்டை உடைபட்டு விட்டது. கத்தியினால் குத்திய கன்னத்தில் அவ்வோட்டையின் வழியாக, முட்டையின் வெள்ளைக்கருவும் மற்றும் வெளியே வந்தன. வைத்தியன் ஜெப கோஷம் புரிந்தான்; "பார்த்தீர்களா? பார்த்தீர்களா? இநீர் எவ்வளவு இருக்கின்றது!" என்று கூவிக்கொண்டே, மறு கன்னத்திலும் குத்தினான். அப்பக்கத்தில் இரண்டு முட்டைகள் உடைந்து விட்டன. முன் போலவே முட்

டைக் கரு வெளியே வந்தது. வைத்தியன் மறுபடியும் "எவ்வளவு சிழ்? பார்த்தீர்களா?" என்று கனைத்தான். எனக்கு வலியொரு பக்கமும் கோபம் ஒரு பக்கமும் உண்டாய் விட்டன. உடனே முட்டைகளை யெல்லாம் வெளியில் துப்பினேன். கோபத்தால் குதித்தேன். "ஏ, மூடவைத்தியா! வெளியே வந்தது சிழுமன்று, நீர்நீருமன்று. கோழி முட்டைகளின் வெள்ளைக் கருவும் மஞ்சட் கருவும் தான். உன்னைப் போல முட்டாள் எவனாவது உண்டா?" என்று கத்தினேன். அந்த வைத்தியன் மருந்து கொடுத்த வியாதியஸ்தர்கள் மறு உலகம் செல்வதேயொழிய இவ்வுலகில் இருப்பதேயில்லை. ஆதலால் அவனை மிரட்டி விடலாமென்று நினைத்தேன். ஆனால் அவன் சட்டென்று திரும்பி என்னைப் பார்த்து "நீ தான் மூடனிலும் மூடன்" என்றான்.

கிழவி இந்தக் கதைகளைக் கேட்டுக் கோழி முட்டை மூடனை நோக்கி "நீ தான் முழுமூடன்; நான் உன்னைத்தான் கும்பிட்டேன்" என்றாள்.

நமது எதிர்காலம்.

(ஸ்ரீமான் ப. சு. நெல்லையப்பபிள்ளையவர்கள் எழுதியது.)

இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம் வேண்டும்; இந்துக்களுக்கு ஸ்வதந்தரம் வேண்டும் என்று சில வருஷங்களுக்கு முன்னர் நமது தேசாபிமானிகள் பேசிய காலங்களில் இங்கிலீஷ்காரருட் பலர் கைகொட்டி நகைத்தனர்; இந்துக்களுள்ளும் பலர் இது பகற்கனவென்று கருதினர். ஒற்றுமையும் ஊக்கமும், உறுதியுமற்ற "சிறிய" இந்தியர் அடிமைகள்போன்று நடத்தப்படுதற்கே தகுதியானவர் என்று உலகம் கருதியது. இந்தியா ஸ்வதந்தரம் அடையவேண்டுமென்று அவாமிகுந்தவர்களாய், நேரான மார்க்கங்களிலோ மாறான மார்க்கங்களிலோ முயற்சிசெய்து சிறைவாசமடைந்தவர் எத்தனைபேர்? அத்தகைய விருப்பத்தில் உற்சாகமிகுதியால்செய்த செயல்களால் சர்க்காரின் கோபத்திற்காளாகி இன்னும் தீவாந்தரங்களில் வசிப்போர் எத்தனைபேர்!

ஆனால் சென்ற சில வருஷங்களுக்குள் உலகம் பெரிய மாறுதலடைந்து விட்டது. சமுத்திரத்தில் சில காலங்களில் அண்டமுகட்டைத் தொடும் அலைகளும் பாதாளத்தைக் காட்டுவதுபோன்ற

அலைகளும் உண்டாவதுண்டு. அது போன்று உலகமாகிய பெருஞ் சமுத்ரத்திலும் பிரமாண்டமான அலைகள்(மாறுதல்கள்) ஏற்படுவதுண்டு; அதனைப் பிரளயமென்று கூறலாம்.

இப்பொழுது ஏற்பட்டுள்ள யுத்தம் உலக நாசத்திற்காகவேற்பட்டதோவென்று நாம் வருந்துவது உண்மையேயானாலும் இதனால் உலகத்திற்கு மிகப் பெரிய நன்மையும் ஏற்படுகின்றது. இந்த யுத்தம் தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் ஏற்பட்ட யுத்தமாகும். தர்மங் குன்றி அதர்மம் மேலோங்கும் பொழுதெல்லாம் இத்தகைய யுத்தம் ஏற்படுவது ஸகஜமேயாகும். ஸத்யத்தையும் தர்மத்தையும் மறந்து ஸ்தூல சக்தி யொன்றையே பிரதானமாகக் கொண்டு உலகத்தை யடக்கியாள விரும்பும் அஸத்க்ஷத்ரியர்களின் நாசத்திற்காகத் தெய்வஸங்கற்பத்தால் இந்த யுத்தம்வற்பட்டதென்பது அறிவாளிகளின் சித்தாந்தமாம். இந்த யுத்த முடிவில் அதர்மம் சக்தியிழுந்து தர்மம்தலைத் தோங்கத் தொடங்குமென்பதில் ஐயமில்லை. நேற்று முளைத்தசுரைச்செடி பல வருஷங்கள் பார்த்த பனையின் தலை மீதேறி அட்டகாசஞ் செய்து மட்டற்ற மகிழ்ச்சியோடிருந்து, பின் பட்டொழிவதுபோல, தர்மத்தின் மீதும் அதர்மம் சில காலம் வெற்றிபெறுவதுண்டு ஆனால் விரைவில் அதர்மம் வீழ்ச்சி யடைய, தர்மம் தலைத்தோங்கும் என்னும் நித்தியஉண்மையை இந்த யுத்தம்போன்ற ஸம்பவங்கள் அடிக்கடி உறுதிப்படுத்துகின்றன. இப்பொழுது ஸத்யமே வெற்றி பெறும் என்னும் உண்மையும் லௌகிகப் பெருமை ஒன்றைமட்டும் ப்ரதானமாகக் கொண்ட (கானல் நீர் போன்ற) மேல் நாட்டு நாகரிகம் பயனற்றதென்னும் உண்மையும் மேல் நாட்டாருக்கும் நன்கு விளங்கிவிட்டன. ஸத்யத்திற்கும் தர்மத்திற்கும் கர்த்தர்களாய், பூர்விகப் பெருமையும் மிகப் பழைமையான நாகரிகமும் பொருந்திய மேதாவிகளின் சந்ததியாராக வந்த பாரதர்களாகிய நாம் உலகத்தி லுள்ள பலவேறு ஜாதியார்களுக்கும் தலைமை வகிக்கும்ஸ்தானட பெருமை கொண்டவர்களாயிருக்க, மேல் நாட்டார் உலகத்தார் நமக்குத் தங்களுடன் ஸமத்வமான உரிமையுள்ள பெருமையும் கொடுக்கப் பிரியமற்றவராயிருந்தனர். இந்த யுத்தத்தின் பயனாக நமக்கு நமக்குரிய யதாஸ்தானப் பெருமை கிடைக்கப்போகின்றது. 'கெட்டறிக கேளிர் பயன்' என்பதுபோல இந்த யுத்தத்தில் இங்கிலாந்துக்கு உதவியாக இந்தியா செய்துவரும் அளவற்ற

உதவிகள் உலகத்தாரையே ஆச்சரியப்படுத்தி விட்டன. இதுவும் யுத்தத்தால் இந்தியாவுக்கேற்பட்ட பெரு நன்மைகளுள் ஒன்றும்.

இதுமட்டுமென்று; இந்தியாவின் மகிமையையும், ஏகாத்மிக பாவத்தை அஸ்திவாரமாகக்கொண்ட வேதாந்தத்தின் கொள்கைகளையும் ஐரோப்பிய, அமெரிக்க நாட்டார் சென்ற சில வருஷங்களாக அறிந்து இந்தியாவின் உண்மை நிலைமையையும் அது உலகத்தில் அடையவேண்டிய உந்நத ஸ்தானத்தையும் உணர ஆரம்பித்தனர். இந்தியா ஆத்மஞானத்தை அஸ்திவாரமாகக் கொண்டதென்னும் உண்மையே பிறநாட்டார்க்கு நம்மீது பக்திபூர்வமான மதிப்பையுண்டுபண்ணியதென்பதில் ஐயமில்லை. இது சம்பந்தமாகக் காலஞ்சென்ற விவேகாநந்த ஸ்வாமிகள் மேல் நாட்டில் செய்த முயற்சிகள் பெரும் பயனை விளைத்தன. இந்தியா அபூர்வமான ஸம்பத்துள்ள தென்பதை அவர் பிரஸங்கங்களும் பேச்சுக்களும் காட்டின; பிறகாலத்தில், திலகரது நூல்களுள் சில ஐரோப்பிய நாட்டாருக்கு ஆச்சரியத்தை யுண்டுபண்ணின. ரவீந்திரநாத டாகூர், ஸரோஜினி நாயடு, டோரு டட் முதலியோரின் காவியங்களும் ஐரோப்பியர்களிடம் நம்மீது மதிப்பை உண்டுபண்ணின. ரவீந்திர நாதரின் பாடல்களைப் படித்த பல ஐரோப்பியர் இந்தியாவின் ஆத்மஞான ஊற்று எத்தகைய தென்பதைச் சிறிது பருகி ருசி பார்த்து அதற்குரியவர்களான நம்மீது விசேஷ மதிப்பைக் கொண்டுவருகின்றார்களென்பதில் ஐயமில்லை.

கல்கத்தாப் பிரஸிடென்ஸிக் காலேஜிச் சாஸ்திர பண்டிதரான ஜகதீச சந்த்ர போஸின் பெருமையை அறியாதார் யார்? அக்கலாசாலையின் ரஸாயன சாஸ்திர பண்டிதரான பிரபல சந்திர ராயரும் அவர் போன்றவரே யாவர். இவ்விரண்டு பண்டிதர்களும் தங்கள் சாஸ்திர ஆராய்ச்சியாலும் நுண்ணிய அறிவாலும் தாங்கள் உலகத்திலுள்ள பல சாஸ்திர பண்டிதர்களுடன் சமத்வமானவர்களென்பதைக் காட்டியதுடன் சில விஷயங்களில் அவர்களை விட மேலான ஆராய்ச்சியும் அறிவு முள்ளவர்களென்பதையும் நிரூபித்து விட்டனர்; இப்பொழுது அவர்களின் அபாரஞானத்தைக் கண்டு உலகம் ஆச்சரிய மடைகின்றது. கம்பியில்லாத் தந்தியென்று இப்பொழுது உலகமெங்கும் வியந்து பேசப்படும் வித்தையை ஜகதீசச் சந்திர போஸ் பல

வருஷங்களுக்கு முன்னரே கண்டு பிடித்துவைத்திருந்தார். ஆனால் அவரிடம் போதுமான பணமில்லாததாலும் நமது தேசத்திலுள்ள பணக்காரர்கள் அவரை ஆதரியாமையாலும் அவர் தாம் பல காலம் வருந்திக் கண்டு பிடித்த வித்தையை உலகத்தாருக்கு நிரூபித்துக் காட்டிப் பெரும் புகழடைய முடியாதுபோய் விட்டது; இப்பொழுது மார்க்கோனி என்பவருக்குப் பெரும்பெயரும் புகழும் படைத்துள்ள கம்பியில்லாத்தந்தி வித்தை இவர் கண்டு பிடித்த வித்தையேயன்றோ? இப்பொழுது அமெரிக்காவில் உபந்யாசங்கள் செய்துவரும் இவரது பாண்டித்யத்தைப்பற்றி அமெரிக்கப்பத்திரிகைகள் ஆச்சரிய மடைந்தெழுதுகின்றன. ரவீந்திர நாதர், ஜகதீஸ சந்திர போஸ் இவர்கள் போன்ற தனி மனிதர்களின் செயல்களும் இந்தியாவுக்கு மகிமையை உண்டுபண்ணி வருவதுடன் 'கேவலம் இந்தியரா' என்று ஏழைமையாகக் கருதியிருந்த வெளி நாட்டாருக்கு நம்மீது மதிப்பையும் வியப்பையும் உண்டுபண்ணிவிட்டன. அறிவும் சாமர்த்தியமு மிகுந்த தனி மனிதர்களால் இந்தியாவுக்கு வெளி நாடுகளில் ஏற்பட்டுள்ளதும் ஏற்பட்டுவருவதுமான கௌரவத்தைக் குறிப்பிடுவதற்கு மேலே கண்ட விஷயங்களே போதுமானவை.

இனி, ஐரோப்பாவுக்குச் சென்று இங்கிலீஷ்காரருக்கு உதவியாக யுத்தஞ் செய்து வரும் நமது சுதேச ராஜாக்களாலும் ஸமோத்ரர்களாலும் அவர்கள் யுத்தத்தில் காட்டிவரும் அசாதாரணமான வீரதீரச்செயல்களால், உலகமெங்கும் நமக்குப்பிரதாபம் ஏற்பட்டுவருகின்றது. இந்துக்கள் ஏதோ ஆப்பிரிக்காக்கண்டத்திலுள்ள காப்பிரி ஜாதியாருக்கு அடுத்த படியிலுள்ளவர்களென்று கருதியிருந்த அந்நிய நாட்டாருட் பலர் இப்பொழுது இந்துக்கள் மிகுந்தமேதாவிகள் என்பதையும் தங்களுடன் ஸமத்வமான-சில விஷயங்களில் தலைமை வகிக்கும்படியான- அறிவும் ஆண்மையும் கொண்டவர்களென்பதையும் அநுபவத்தில் அறிந்துவிட்டனர். உலகமெல்லாம் மதித்துப் போற்றும் பொழுது யார் தான் அதன் உண்மையை அறியாதிருக்க முடியும்? சுயமாக அரசாட்சி புரிவதற்குத் தகுதியற்றவர்களென்று பலகாலமாகக் கூறி வந்த பிரிட்டிஷ்கவர்ன்மெண்டாரும் பிரிட்டிஷ் ஜாதியாரும் இந்துக்கள் தங்களுக் குரிய கௌரவ ஸ்தானத்தை அடைவதற்குத் தகுதியானவர்களென்று அறிய ஆரம்பித்து விட்டனர். நீந்தத் தெரியாதவ

னென்று கருதிக் கடற்கரைக் கனுப்பப் பயந்து கொண்டிருந்த வலைஞன் தனது பிள்ளை சாமர்த்தியமாக நீந்துவதைக் கண்டபின் கடலோட விட்டுவிடுவானன்றோ? அதுபோல, இந்துக்களின், ஐக்ய உணர்ச்சியும், ராஜபக்தியும், அறிவாற்றலும் இத்தன்மையன வென்பதைப் பிரிட்டிஷார் இந்த யுத்தத்தால் அறிந்து கொண்டனர்.

மேற்கூறிய காரணங்களால் இந்தியா விரைவில் ஸ்வராஜ்யத்தைப் பெற்று உலகத்தில் தனக்குரிய தகுதியான கௌரவ ஸ்தானத்தை அடையுமென்பதில் ஐயமில்லை; எத்தனையோ தேசாபிமானிகள் இராப்பகலாக எண்ணியிருந்த எண்ணங்கள் விரைவில் கைகூடப்போகின்றன. அதனால் இந்தியாவின் எதிர்காலம் மிக மாட்சியுடன் விளங்கும். இந்தியாவின் எதிர்காலம் மட்டுமன்று, உலகத்தின் எதிர்காலமே இனி மிகச் சிறப்பானதென்று கூறலாம்.

ஆனால் நல்லகாலம் வருகின்றதென்று நம்மில் ஒவ்வொருவரும் நம்பிச் சும்மாவிருந்து விட்டால் ஒருகாலமும் நமக்கு நல்ல காலம்வராது. அதிர்ஷ்டம் என்னும் பெண் தலையின் முன்பக்கத்தில் கேசமுள்ளவள், பின் பக்கத்தில் இல்லை; அவளை எதிர்பார்த்திருந்து, அவள் தலைகாட்டிய பொழுதே அவள் முன்னுள்ள கேசங்களைப் பிடிப்போரே அதிர்ஷ்ட சாலிகளாவர். விட்டுவிட்டால் அவளைப்பிடிப்பது சாத்தியமல்ல; ஏனெனில் அவளது தலையின் பின்பக்கத்தில் கேசமில்லை, என்று ஓர் ஆங்கிலப் பண்டிதர் கூறுகின்றார். காலமழை பெய்யுமுன்னரே தனது விளை நிலங்களைப் பண்படுத்தி உழுது வைக்கும் விவசாயியே அம்மழையினாலாய பயனை அடைதல் கூடும்.

ஆதலால் நாம் இனி வரும் எதிர் காலத்தில் உலகத்தாருக்குண்டாகும் நன்மைகளை நாம் அடைவதற்குத் தகுதி யுள்ளவர்களாக நம்மைச் செய்து கொள்ளல் வேண்டும். ஆறு பெருகியோடினும் நாய் நக்கித்தான் குடிக்கவேண்டும்; அதுபோலசோம்பலும் தூக்கமு மிகுந்தவர்களாய், ஊக்கமும் உழைப்பு மில்லாதிருப்பவர்கள் எந்தக் காலத்திலும் நன்மை யடைதல் முடியாது; முயற்சி திருவினையாகும். முயற்சி செய்வோர்களுக்கே கடவுளும் உதவி செய்கின்றார்.

"குடி செய்வ லென்னு மொருவர்க்குத் தெய்வம் மடி தற்றுத் தான் முந்துறும்." எமது குடியை (அல்லது நாட்டை) உயர்ந்த் சிறந் தோங்கச் செய்வோ மென்னுங் கருத்துடன், ஊக்கத்துடனும் உறுதியுடனும் முயற்சிப்போர்களுக்கு உதவி புரியுமாறு தேவர்கள் தங்கள்மேலேயுள்ள உத்தரீயங்களை அறையில் கட்டிக்கொண்டு அவர்கள் முன்வந்து நிற்பார்கள் என்று தமிழ் வேதத்தின் தலைவரான திருவள்ளுவர் கூறுகின்றார்.

இனி வரும் நல்ல காலத்தை நமக்கு நல்லகாலமாக்க வேண்டுமாயின் நாம் உறுதி யுடனும் ஊக்கத்துடனும் உவப்புடனும் முயற்சிகள் புரிதல் வேண்டும். நாம் உலகந்தோன்றிய காலத்திலேயே தோன்றிய மகாப் பெரிய ஜாதியார், மகரிஷிகளின் சந்ததியார், ஒரு காலத்தில் தேவர்களும் புகழ்ந்து போற்றத் திகழ்ந்தவர்கள் என்னும் உண்மைகளை ஒவ்வொரு பாரதனும், ஒவ்வொரு தமிழனும், சிந்தையில் கொண்டு, நமது முந்திய மேல் நிலைமையை அடையத் தன்னால் இயன்ற வாறெல்லாம் முயற்சித்தல் வேண்டும். நமது நாடு, நமது தேசம், நமது ஜனங்கள் என்ற நோக்கம் நம்மில் பெரும் பான்மை யோர்க்கில்லை. உலகத்திற்குத் திலகம்போன்று விளங்கிய எனது பாரதநாட்டை மீட்டும் பழைய முன்னிலையை அடையச் செய்வேன். பார்ப்பானாயினும் சரி; பறையனாயினும் சரி, பிள்ளையாயினும் சரி, செட்டி யாயினும் சரி; அனைவரும் ஒரே தாய் நாட்டிற் பிறந்த எனது சகோதரர்கள். எனது தாய் நாட்டாரான சகோதரர்களை உலகத்தார் மதித்துப் போற்று மாறு அவர்களுக்கு என்னால் இயன்ற கைங்கரியங்களைச் செய்து கைதூக்கி விடுவேன் என்று ஒவ்வொருவனும் மனத்தில் உறுதியாகக் கொண்டு வேலை செய்ய வேண்டும். எதிர்காலத்தில் நமது பாரத மாதா உலகத்திற்கு ராஜ ராஜேஸ்வரியாக விளங்குவதற்கு நாம் உதவி செய்வோர்களாக இருத்தல் வேண்டும்.

சோம்பல், தூக்கம், சுயநய மிகுதி, ஊக்கமின்மை, சிரத்தையின்மை, சத்தியத்தில் நம்பிக்கை யின்மை, கர்மத்தில் பற்றின்மையாதி துர்க்குணங்கள் நம்மிடம் மிகுந்துவிட்டன. இவற்றைத் தமிழர்கள் ஒழிக்க முயல வேண்டும். ஊக்க முடையவர்களே இந்த உலகத்தில் உயர்தற் குரியவர்கள். ஊக்கமும் உறுதியு முள்ளவர்கள் இந்த உலகத்தில் மட்டுமன்று, எந்த உலகத்திலும் எந்த அசாத்யமான காரியத்தையும் செய்து முடித்து விடலாம். ஒவ்வொரு மனிதனும் மகத்தான சக்தியுள்ளவனே. ஆனால், அதனை

அடையும் வழியை அறியாமலும், அதனை அடையாமலுமே அநேகர் காலங்கழிக்கின்றனர். நம்மில் அநேகர் வாழ்க்கையைப்பற்றிக் குறுகிய நோக்கங்கள் கொண்டவராய், இருட்டுவீட்டில் குருட்டுப் பூனைகள்வாழ்வதுபோன்று வாழ்ந்துவருகின்றனர். வாழ்க்கையைப் பற்றியும் நமது எதிர்காலத்தைப் பற்றியும் நிரவிசாரித்துத் தெளிந்துகொள்ளுதலால் நாம் இவ்வுலகத்திலேயே மிகஇன்பமான வாழ்க்கை வாழ்தல் சாத்தியமாகும் சுயநலம் ஒன்றையே கொண்டு வாழ்தல் மிகக் கொடிது; சுயநலத்தையே பிரதானமாகக் கொண்டு வாழ்வோர் இன்பவாழ்க்கை அடைதல் சாத்தியமல்ல. குறுகிய நோக்கங்கள், தன்னை மட்டும் பிரதானமாகக் கருதிவாழும் குருட்டு வாழ்க்கை, சிறிய வியவகாரங்கள், அற்பச் சண்டைகள் இவற்றையெல்லாம் நாம் அடியோடொழித்து விடவேண்டும்; இவை நமக்கேனும், பிறர்க்கேனும் நன்மை விளைவிப்பனவன்று. கௌரவமான உயிர்தர வாழ்க்கையை விரும்புவோர்க்கு இவை உரியனவுமன்று. நாம் எதிர்கால மாகிய பெருங்காலத்தில் சிறந்தோங்க வேண்டுமானால் உயர்ந்த கொள்கைகளும் விரிந்த மனமும் உடையவர்களாய் ஊக்கத்துடன் வேலை செய்யவேண்டும். குறுகிய நோக்கங்களும் அற்ப வாழ்க்கையுங் கொண்டு வாழும் சிறிய ஜாதியாருக்கு உலகத்தில் என்றும் சிறந்த வாழ்க்கையும் கௌரவமும் ஏற்படா. தன்மதிப்பு, சத்தியத்தில் பற்று, தர்மத்தில் விருப்பம் முதலிய ஸம்பத்துக்களைக் கொண்டு நாம் முன்னேற்க வேண்டும். ஞானமும் திறமையும் உள்ளோர்சிறந்து வாழ்வார். அவையிரண்டுமில்லாதார் நாசமடைவர். அதனால் இவ்வுலகத்தில் நன்மையையும்வன்மையையும் விரும்பும் ஒவ்வொருவனும் அவற்றை யடையப் முயலவேண்டும். இனிவரும் எதிர்காலத்தில் தமிழர்கள் தங்களுக்குரிய ஸ்தானத்தை அடைவதற்கனுகுணமான நோக்கத்துடன் இப்பொழுதே நாம்ஊக்கத்துடன் வேலைசெய்யத் தொடங்கவேண்டும் இதுவரை நாம் மிகக்குறுகிய சுயநல வாழ்க்கை வாழ்ந்து வந்ததனால் நாம் மிகத்தாழ்ந்த நிலைமைக்கு வந்து விட்டோம்; ஆதலால் நாம் சுருங்கிய சுயநல வாழ்க்கையாகிய இருட்கூபங்களினின்று விரிந்த, பரந்த உலகவாழ்க்கையாகிய சூர்யப்ரகாசத்தில் பிரவேசிப்போமாக. தமிழர்கள் ஞானமும் திறமையு முற்று, சகல நன்மையும் வன்மையும் பெற்று விளங்குமாறு பாரத நாட்டுக்குப் புதிய உயிர் அளித்துவரும் பரமேஸ்வரன் திருவருள்புரிக.

ஆத்ம தர்சனம்.

அல்லது.

சிவமயம்.

காப்பு.

ஆதிப் பொருளதுவாய் ஆன்ம வொளிக்கடலாய்
நீதிப் பொருளதுவாய் நின்றபெருஞ்—சோதியது
ஒன்றுளதஃ தேபலவென் றுற்றசிவ மாண்புரைக்கு
என்றுமழி யாப்பொருள்காப் பாம்.

அனைத்தினையுங் காண்பதுவாய் ஆநந்தம் பூண்பதுவாய்த்
தினைத்துணையுந் தீமையறி யாததுவாய்—அனைத்திற்குங்
காரணமாய்க் காரியமாய்க் கர்த்தாவாய் வாழ்பொருளைப்
பூரணமாய் நாப்புகழ்வோ மே.

---

(1) உடலு நானல்லவே பொறியுநா னல்லவே
உண்மெய்யு நானல்லவே
கடலலைகள் போன்றுவரு மகந்தை நானல்லவே
கனவுயிர்க் கூட்டமலவே
மதியுநா னல்லவே மனைமக்கள் பூமிபொருள்
மதியாத கன்றனைத்தின்
கதியையுங் காண்பதும் அழிவற்றதும்உளம்
கருதினு லொளிர் சிவம் நான்.

(2) பிறந்தவனு நானல்ல வளர்ந்தவனு நானல்ல
பெற்றவனு நானல்லவே
இறந்தவனு நானல்ல இயற்கைச் செயல்களும்
இவ்வுடற் குள்ளதொழிலும்
துறந்தவனு மறிவுருவ தானவென் மாட்டிலெத்
துக்கமு மணியா தினைத
மறந்தவனு நானென்று மதிகெட்டவனு மன்றி
மற்றையோர்க் கின்ப சிவம் நான்

(3) கயிறொன்றை யறிவின்மை யாலரவதென் றுமே
கருதியஞ் சுவது போல

உயிரொன்றை யறிவின்மை யாலான்ம வடிவென்று
உழறியழி கின்ற போது
கயிறுதா னரவல்ல வெனவாப்த ருரைகேட்டுக்
கனமய றெளிந்தவாபோல்
உயிரல்ல நீயென்று குருமொழி யறிந்தவுடன்
உண்மைகண் டேன் சிவம்நான்.

(4) மெய்துயில் மயக்கமாய்க் கனவினிற் காண்பவைகள்
மெய்யிலா வாறுமுற் றும்
பொய்யுலக மயலுற்று மெய்புணர் மயக்கத்தில்
பொருளென விளங்கு கிறது
பொய்யான மாசற்று அழிவற்று எங்குமே
பொதுவாய் நிறைந்திருக்கும்
மெய்யான முழுமுதற் கடவுளா யொன்றான
மெய்த்தெய்வ மாஞ்சிவம் நான்.

(5) இங்கெங்த வெளியிலே தோற்றுவதும் மாயைக்
கிருப்பிடம தான பொருளும்
எங்குமே யுண்மையாய் உலகமுந் தோற்றுமிடம்
எனையன்றி வேறில்லை காண்
உன்முகம் நீநோக்குங் கண்ணாடி தன்னிலே
உண்மையாய் விளங்கு மதுபோல்
என்னிட மிரண்டற்று விளங்குகிற தாதலால்
எங்குமொளிர் கின்ற சிவம்நான்.

(6) நனவினில் நினைப்புசொல் செய்கைவினை யாட்டெலாம்
நடப்பதைப் பார்த்துவருஞ் சிவனு நானே
கனவினிற் காண்கின்ற வுலகத்து நினைவெலாங்
கண்டுவியப் பற்றெளிருஞ் சிவனுநானே
தனதற்ற பாழினில் மனதற்று உணர்வினைத்
தரிசிக்கு மின்பமய சிவனுநானே
சினமாதி யற்றெலாங் கண்டுமுப் பாழற்றுச்
சிறிதுமழி வற்றநற் சிவனுநானே.

ஆதியிலே சங்கராசாரி யென்பவர் "ஆத்மா னு
பூதி" யென்றே யொருநூன் மொழிந்தார் வடமொழியிலந்த
ரீதியிலே தென் மொழியிற் புனைந்தனன் சிறுவனிதை
ஓதி யுணர்ந்து அமைதியுற் றோர்மிக வுத்தமரே.

ஆர். எஸ். கங்கா ஜடேச சர்மா.

சமாச்சாரக் குறிப்புகள்.

கௌதம புத்தர் புத்தி விருட்சத்தினடியி லுட்கார்ந்து புத்த ஞானத்தை யடைந்து இற்றைக்குச் சுமார் 2501-வருஷங்களாய் விட்டன. மே மாதத்தில் தான் அவர் ஞானம் எய்தினராம் ஆதலால் இம்மாதம் நமக்கு விசேஷமான மாதம், உலகினுக்கே விசேஷமான மாதம். அன்பினால் உலகத்தை ஜெயிக்கலாமென்று அநுபவத்தில் காட்டிய ஆரூட சிகாமணி புத்தரே யாவார். ஹிந்துக்கள் பௌத்தக் கொள்கைகளின் லட்சியத்தை மறுத்து விட்டபோதிலும், புத்தரை மகா விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்றாகக் கருதுகிறார்கள். புத்தமத மானது உலகில் ஓங்கி வளர்ந்து பிரகாசித்தது. இப்பொழுதும் முக்கிய மதங்களில் ஒன்றாயிருக்கின்றது. புத்தமதக் கொள்கைகளை அஸ்திவாரமாகக் கொண்டு அசோகன் என்ற சக்கரவர்த்தி அன்பினாலும் பரிசுத்தத்தினாலும் ஒருபெரிய ராஜாங்கத்தை ஸ்தாபித்தான். வித்தை வளர்ந்தது; வியாபாரம் செழித்தது; கைத்தொழில்கள் பெருகின. கப்பல்கள் தூரதேசங்களுடன் போக்கு வரவு செய்தன. இது புத்தமதப் புரட்சி! ஆ! இத்தகைய புரட்சியை மனதார எப்பொழுதும் விரும்பாதவர் எவர். ?

*　　*　　*

சென்னையில் சில 'பெரிய' மனிதர்கள் சேர்ந்து ஒரு தமிழ்க் கழகம் ஸ்தாபித்திருக்கிறார்களாம். தமிழ்ப் பாஷையை ஆதரிக்கும் பொருட்டும் அபிவிருத்தி செய்யும் பொருட்டும் தமிழ்ப் பாஷையில் பழைய நூலாசிரியர்களின் ஜீவித சரித்திரங்களையும் நூல்களையும் விரிவாக ஆராய்ச்சி செய்து தக்க வியாசம் எழுதி யனுப்புவோர்கட்கு இக்கழகத்து அங்கத்தினர்கள் தங்கப் பதக்கங்கள் அளிக்கத் தயாராயிருக்கிறார்களாம். விளையாட்டுப்போல்வும்

வேடிக்கை போலவும் அண்ட பிண்ட சராசரங்களை யெல்லாம் ரட்சித்து வருகின்ற ஜெகதீஸ்வரி இவர்களுடைய இம்முயற்சியை யும் பலிதப் படுத்து வாளாக! ஆனல் இன்னும் இரண்டொரு விஷயங்கள் இந்த சந்தர்ப்பத்தில் நாம் குறிப்பிடவேண்டியிருக் கின்றன. இந்தக் கழகமானது சென்ற சில வருஷங்களாக மௌ னமாக வேலை செய்து கொண்டிருந்தது என்று 'ஹிந்து'ப் பத்திரி கையில் ஒரு சிறு தலையங்கத்தில் எழுதப் பட்டிருந்தது. என்ன தான் மௌனமாக வேலை செய்தாலும், தலை முறை தலைமுறையா கத் தமிழ்ப் பாஷையை ஆதரித்துக் காப்பாற்றி வருகின்ற தமி ழ்ப் பண்டிதர்களும் அறியாமலா நடந்திருக்கிறது? இக்கழகத்தில் அங்கத்தினர்களாயிருப்பவர்களில் சிலர் நமக்கு அத்திபந்த நண் பர்களாவார். இவ்விஷயத்தைப் பற்றி அவர்கள் ஒரு பொழுதும் பிரஸ்தாபித்ததைக் கண்டிலோம்.

* * *

நிற்க. இவ்விஷயம் ஆங்கிலப்பத்திரிகைகளில் ஆங்கிலபாஷை யில் ஆங்கில மறிந்த அறிஞர்களின் பொருட்டுமட்டும் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றமை அதியாச்சர்ய மாயிருக்கின்றது. தமிழ்ப் பாஷா நூலாசிரியர்களின் ஜீவித சரித்திரங்களையும் நூல்களையும் அறிந்தவர்கள் தமிழ்ப் பாஷை மாத்திரம் தெரிந்தோர்களில் எவர் இருக்கின்றனர்? என்று ஷை கழகம் கருதி விட்டது போலும்! வயிற்றுப் பிழைப்புக்கும் டாம்பீகத்துக்குமே படிப்பை லட்சிய மாகக் கொண்டிருக்கும் இக்காலத்தில் ஸ்வதேச பாஷைகளை மே னாட்டுப் புலவர்களது உரைகளையும் அபிப்பிராயங்களையும் தழுவி அரை குறையாகப் படித்து "தட்டிச் சொல்ல ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்" என்றவாறு அகங்கரித்துத் திரிகின்ற ஆங்கில பாஷாப் பண்டிதர்கள்தாம் தமிழ் அறிந்தவர்கள்போலும். தங்கப் பதக்கங்கள் பெறும் பொருட்டு எழுதப்படும் வியாசங்கள் இன்னரால் அல்லது இன்ன புலவர் கூட்டத்தால் மதிப்பிடப்பெறு மென்று ஷை கழகத்தின் அறிக்கைப்பத்திரத்தில்கூறப்படவில்லை. ஆனல் "ஹிந்து எழுதிய தலையங்கத்தில் தக்க வித்துவான்களால் வியாசங்கள் பரிசோதிக்கப்படு மென்று எழுதப்பட்டிருந்தது. அறிக்கைப் பத்திரத்திலில்லாத விஷயம் "ஹிந்து" வுக்குத்தெரிந் திருக்கிறதை யோசித்தால், "ஹிந்து" வும் அக்கழகத்திற் சேர்ந் ததோ வென்று தோன்றுகிறது. எப்படியாயினும் ஷை கழகம் ஒப்பி

ழ்ப் பாஷையை உண்மையாக உந்நத நிலைமைக்குக் கொண்டு வர வேண்டுமென்பதே நமது கோரிக்கை. ஆனால் மேற்படி கழகத்தின் அங்கத்தினர்கள் இவை யெல்லாவற்றையும் செய்வதற்கு முன்பாகத் தங்களுடைய சொந்த கிரகங்களிலும் தங்களுடைய தமிழச் சிநேகிதர்களுடன் செய்யும் சாதாரணமான நித்திய சம்பாஷணைகளிலும் தமிழ்ப்பாஷையைத் தவிர, அந்நிய பாஷைகளை ஒரு பொழுதும் பேசுவதில்லை ; அந்நிய பாஷாச்சொற்களை ஒரு பொழுதும் மறந்து உபயோகிப்பதில்லை யென்று பிரதிக்ஞை செய்து கொள்வார்களாயின், இதுவே தமிழ்ப்பாஷையினிடத்து இவர்களுக்குள்ள அபிமானத்துக்கு ஒரு அறி குறியாகும். 'பெரிய' மனிதர்கள் வினை செய்ய வேண்டுமே யொழிய, சிறிய குழந்தைகளைப்போல விளையாடலாகாது.

*　　*　　*

ஒரு தேசத்திற்கு உயிர் அத்தேசத்தின் பாஷையாகும். ஸ்வய பாஷையைக் கைவிடுவோர் மூடத்தனமாகவோ அல்லது பைத்தியம் பிடித்தோ தற்கொலைசெய்து கொள்பவர்க ளாகின்றார்கள். தற் கொலைசெய்து கொள்ள யத்தனித்தல் அரசாங்கச்சட்டத்தின்படி குற்றமாகுமானால், தன்னையும் தன்னுடைய ஜனசமூகத்தையும் கொல்லஆரம்பித்துத் தேசபாஷையை உதாசீனம் செய்பவன் ஆயிரம்மடங்கு அதிகம் குற்றங்களைப் புரிபவனாவான். நமது ராஜாங்கச் சட்டங்கள் இக்கொலைப்பாதர்களைக் குற்றவாளிகளுடைய கூட்டத்தில் சேர்க்காவிட்டாலும், எல்லா வுலகங்களுக்கும் ராஜ ராஜேஸ்வரியாய் அரசாட்சி புரிந்து வரும் மகாசக்தியின் சிருஷ்டி நீதிகளின் பிரகாரம் இவர்கள் குற்றவாளிகளேயாவர்.

*　　*　　*

தென்னாப் பிரிக்கா இந்தியர்களின் தலைவராகிய ஸ்ரீமான் காந்தி யவர்கள் சென்னைக்கு வந்திருந்தார். அவருக்கு வரவேற்புக்களும் உபசாரங்களும் பல விடங்களிலும் பலமாக நடந்தன. சென்னைத் தலைவர்கள் அவரை யுபசாரம் செய்வதில் ஒருவரோடொருவர் போட்டிபோட்டுக் கொண்டார்கள். ஆயினும் அவருடைய சாதாரண உடையையும் சாந்தநடையையும் நிர்ப்பயமான ஹிருதயத்தையும் சமபாவனை சித்தத்தையும் இவர்கள் கைக்கொண்டிருப்பார்களா என்பது சந்தேகம் தான்.

கிறிஸ்தவப் பாதிரி யொருவர் சமீபத்தில் பிரசங்கித்துக் கொண்டிருந்த பொழுது "வலது கன்னத்திலடித்தால் இடது கன்னத்தைக் காட்டவேண்டும்" என்றுள்ள கிறிஸ்துவின் உபதேசத்தை யெடுத்து வியாக்கியானம் செய்தார். அப்பொழுது பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவன் "ஐயா! போதும், போதும், நிறுத்தும். இந்த உபதேசத்தை இங்கு செய்யவேண்டாம். நாங்கள் எப்பொழுதும் இந்தப் போதனையை அநுபவத்தில் பின் பற்றிக்கொண்டு தான் இருக்கிறோம். நீர் ஐரோப்பிய அமர்க்களங்கட்குச் செல்லும் அங்குதான் உமக்கு வேலை யிருக்கிறது. உமது சொந்தவீடு இடிந்து பொடிந்து தூளாகிக் கொண்டிருக்க, நீர் இங்கு வந்து போதிப்பது என்ன அறியாமை! என்றான். கிறிஸ்தவப்பாதிரி வெட்கித் தனது "கடையைக் கட்டிக்கொண்டு" சென்றார்.

* * *

சில மூடர்களும் மூர்க்கர்களும் சேர்ந்து இயேசுகிறிஸ்துவைச் சிலுவையிலறைய, அவர் "பிதாவே" இவர்களை மன்னியும்; தாங்கள் செய்கின்ற தின்னதென்று அவர்கள் அறிகின்றார்களில்லை." என்று தனது விரோதிகளின் க்ஷேமத்தை நாடிப் பிரார்த்தனை செய்தார். அவருடைய சிஷ்யர்களாகிய ஐரோப்பியர்களோ அவருடைய பிரார்த்தனைக்கு நேர்மாறாகப் பிரார்த்திக்கிறார்கள்.

* * *

யுத்தம் நடந்து கொண்டே யிருக்கின்றது, ஜெர்மனியின் கொட்டம் இன்னும் அடங்கவில்லை. ஆஸ்ட்ரியா அறியாமல் அகப்பட்டு விழிக்கின்றது. துருக்கி டார்டனெல்ஸ் ஜலசந்தியை மிகப் பலமாகக் காத்துக் கொண்டு, நேசப்படைகளுடன் யுத்தம் புரிகின்றது; நமது கட்சி ஜெயமடைந்து கொண்டேவருகின்றது என்பதிலும் கடைசியில் நமது கட்சியே நிச்சயமாக ஜெயம் அடையும் என்பதிலும் சந்தேகமேயில்லை.

* * *

இங்கிலாந்து தேசத்தில் தொழிற் கட்சித் தலைவராகிய கீர் ஹார்டி என்பவர் 1913-ம் வருஷத்துக் கடைசியில் செய்த ஒரு பிரசங்கத்தில் யுத்த தேவதைக்கு ஸ்வதந்திர நடை ஏற்பட்டுவிட்டது; ஏசுகிறிஸ்து அலட்சியப் படுத்தப்பட்டுக் காட்சியினின்றும் தள்ளப்பட்டு விட்டார்" என்றார். அவர் கூறி ஆறுமாதத்

திற்குள்ளாக, ஐரோப்பாவில் யுத்ததேவதை நிர்த்தனம் செய்யத் தொடங்கி விட்டமை ஆச்சர்யமே.

* * *

அமெரிக்காவில் வருஷத்துக்கு 12000 ரூபாவுக்குக் குறைந்த வரும்படியுள்ள வர்களுக்கு வருமானவரியே கிடையாது. 12000 ரூபாவுக்கு மேல் 60000 ரூபாய்வரையில் வரும்படியுள்ள வர்கள் நூற்றுக்கு ஒன்று வீதம் வரிகட்டுகிறார்கள். 60000 ரூபாவுக்கு மேல் $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய்வரை வரும்படி யுள்ளவர்கள் நூற்றுக்கு இரண்டு வீதம் வரிகட்டுகிறார்கள். மூன்று லட்சத்துக்கு மேல் வரும்படியுள்ளவர்கள் நூற்றுக்கு நான்கு வீதம் வரிகட்டுகிறார்கள். இதற்கு மேல் வரியே கிடையாது. எவ்வளவு பெரிய கோடீஸ்வரர்களுக்கும் இதற்கு மேல் வரிகிடையாது. அமெரிக்காவில் மாதம் ஆயிரம் ரூபா சம்பாதிப்பவனுக்கு வரி கிடையாது; இந்தியாவில் வருஷம் ஆயிரம் ரூபா சம்பாதிப்பவன் வரிகட்ட வேண்டும்.

* * *

கல்கத்தாப் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டின் முன்பாகஒரு விநோதமான வழக்குக்கொண்டுவரப்பட்டது. கவிராஜ ஜோதீந்திர மோஹன ஸேனர் என்னும் ஒருவர் முனிசிபாலிட்டியில் காமும் ஒரு அங்கத்தினராக விருக்க விரும்பி, தம்மை யாதரிக்கும்படி பொதுஜனங்களைத் தூண்டுவதற்காக சாருசந்திர வைஸக் என்பவரை மாதத்திற்கு ரூபாய் ஐம்பது சம்பளமென்றுபேசி வேலையில் வைத்துக்கொண்டாரென்றும் ஆகமொத்தம் வாதிக்குக் கொடுபடவேண்டிய 200 ரூபாயில் ரூபாய் அறுபத்தேழுதான் கொடுபட்டிருக்கிறதென்றும் பிரதிவாதி பாக்கிரூபாயைக் கொடுக்க மறுக்கிறாரென்றும் பிரியாது செய்யப்பட்டது. காரணம்:—பிரதிவாதி பொதுஜனங்களால் தெரிந்தெடுக்கப்படவில்லை. வாதி பிரதிவாதியைப் பணம்கேட்டபொழுது, பிரதிவாதி மறுக்க, பிரதிவாதி முனிசிபாலிட்டியில் ஒரு அங்கத்தினராகச் செய்த முயற்சியில் தவறிவிட்டதற்கு வாதிதான் ஜவாப்புதாரி யென்று சொல்லிப் பயமுறுத்தினதாகவும் அதனால் பிரதிவாதி கோபம் மிகுந்து வேறுசிலரைச் சோத்துக்கொண்டு வாதியை அடித்ததாகவும் சொல்லப்பட்டது. மாஜிஸ்டிரேட் “இப்படித்தானு தெரிந்

தெடுக்கப்படுவது?” என்று கேட்க, வாதிபக்கம் ஆஜரான வக்கீல் “அநேகம் வழிகளில் இதுவும் ஒன்று; இன்னும் பலஆச்சர்யமான விதங்களும் உண்டு” என்று சொன்னார். மாஜிஸ்ரேட் “அப்படியிருந்தும் 167 பேர்கள் தானே இவருடைய நியமனத்தை ஆதரித்தார்கள்” என்றுகூற, வக்கீல் ‘‘வாஸ்தவம்தான்; நியமனத்தில் அவர் தவறிவிட்டது பற்றி, எல்லோரும் அநுதாபப்படவேண்டியதுதான். ஆனால் வாதியை அடிக்கும்படியான அவ்வளவு அதிகாரம் அவருக்கு இல்லையே’’ என்று உரைத்தார். மாஜிஸ்டிரேட் வாதியைநோக்கி ‘‘உன்னை வேலையில் வைத்துக்கொண்டதனால் பிரதிவாதிக்கு நன்மையுண்டாகவில்லையே” என்றார். வாதி “எங்களால் என்னசெய்ப முடியும்? ஐயா, வேண்டிய மோட்டார் வண்டிகளை வாடகைக்கு அமர்த்தவும் சம்பிரமமாக இடைநேரச் சிற்றுண்டியளிக்கவும் போலீஸ் ஏற்பாடுகள் செய்யவும் பிரதிவாதி வேண்டிய பணம் செலவழிக்காமற் போனால், அவருக்கு எப்படி ஜயம் கிடைக்கும்?’’ என்றார். மாஜிஸ்டிரேட் பின்னர் சாட்சிகளைக் கூப்பிட்டு விசாரணை செய்யலானார். வழக்கின்முடிவு என்னவாயிற்று என்று நமக்குத் தெரியவில்லை. ஆயினும் நமது முனிசிபாலிட்டிகளில் அங்கத்தினராகநியமிக்கப்படுவோர் அநுசரிக்கும் வழிகள் நமக்குத் தெரிகின்றன. இங்ஙனம் “விழாதவன் காலில் விழுந்தாவது” நியமனம் பெறுபவர்கள் பின்பு கர்வம் மிகுந்து பொதுஜன அபிப்ராயத்தை அலட்சியம்செய்து விறைத்துக் கொள்வது மனோதர்ம சாஸ்திரிகளின் பரிசோதனைக்குரிய தோர்பாடமாகும்.